வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 09.12.2022 வெள்ளிக்கிழமை | இதழ் : 01 | பக்கங்கள் : 16




## புவியியல், சுரங்கப் பணியக தலைவர் பதவி நீக்கப்பட்டார்

### பணிப்பாளருக்கு கட்டாய விடுமுறை

கொழும்பு, டிசெ. 09

புவியியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். அத்துடன், புவி அறிவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளார்.

புவியியல் மற்றும் சுரங்கப் பணியகத்தில் இடம்பெற்ற மோசடிகள், ஊழல்கள் மற்றும் முறைகேடுகள் தொடர்பில் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கிடைத்த முறைப்பாடு

15

### தீர்வுக்கான பொறிமுறை

# தமிழ்த் தேசிய கட்சிகளுக்கு ரெலோ கட்சி முன்மொழிவு!

### இந்திய மேற்பார்வையில் சர்வதேச பங்களிப்பும் தேவை

யாழ்ப்பாணம், டிசெ. 09

ஒற்றையாட்சி அற்ற இணைந்த வடக்கு - கிழக்கில் சமஷ்டி தீர்வே அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளின் நிலைப்பாடுமாகும். இதற்கான பேச்சு இந்தியாவின் தலைமை மேற்பார்வையில், சர்வதேச நாடுகளின் பங்கேற்புடன் ஐ. நாவின் பிரதிநிதித்துவத்துடன் நடைபெற வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) தெரிவித்துள்ளது.


இனப் பிரச்னைக்கு பேச்சு மூலம் தீர்வு காண்பதற்கு

15

# காற்று மாசுபாடு உச்சம் ஆபத்தில் யாழ்ப்பாணம்!

### முடிந்தவரை வீட்டிலேயே இருங்கள்! முகக்கவசம் கட்டாயம் அணியுங்கள்!

### அனில் ஜாசிங்க அறிவுறுத்து






**யாழ்ப்பாணம், டிசெம்பர் 09**

**யாழ்ப்பாணத்தில் காற்று மாசுபாடு உச்சத்தைத் தொட்டுள்ளது. இதயம், சுவாசம் சம்பந்தப்பட்ட நோயாளர்கள் முடிந்தவரை வீட்டிலேயே இருக்க வேண்டும். வெளியே செல்பவர்கள் முகக்கவசத்தை கட்டாயம் அணிந்து செல்லுங்கள் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.**

நேற்றைய தினம் வளிமாசுபாடு குறித்து தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் இந்த எச்சரிக்கையை விடுத்திருந்தது. அத்துடன், காற்று மாசுபாட்டால் பாதிக்கப்பட்ட நகரங்களையும் வெளியிட்டிருந்தது.

இதனிடையே, நேற்று முன்தினம் சுற்றுப்புற காற்றுத்தரக் கண்காணிப்பு நிலையத் திறப்பு விழாவில் பங்கேற்பதற்காக யாழ்ப்பாணம் வந்த சுற்றுச்சூழல் அமைச்சின் செயலாளரும் மருத்துவருமான அனில் ஜாசிங்கவும் இந்த எச்சரிக்கையை விடுத்திருந்தார்.

15

## புரிதலுக்காக சில விளக்கங்கள்!

### PM 2.5 என்றால் என்ன?

Fine particulate matter என்பதே PM 2.5 என்று அழைக்கப்படுகிறது. இது காற்றில் இருக்கும் நுண்ணிய துகள்களைக் குறிக்கும்.

ஓர் அங்குலத்தில் 25 ஆயிரம் நுண்துகள்கள் உள்ளன என்பதை குறிக்கும். பி. எம். 2.5 என்ற அளவீட்டில் பெரிய துகள்கள் நமது தலைமயிரின் அகலத்தை விட 30 மடங்கு சிறியதாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

### AQI என்றால் என்ன?

Air quality index (காற்றின் தரச் சுட்டி) என்பதன் சுருக்க வடிவமே AQI. இது காற்றின் தரத்தை குறிக் கும். அதாவது காற்றின் தூய்மை அல்லது அது எவ் வளவு மாசுபட்டு உள்ளது என்பதைக் குறிக்கும்.

காற்றின் தரச் சுட்டியானது, காற்றில் கலந்துள்ள 5 முக்கிய மாசுபடுத்திகளை கணக்கில் கொள்ளும். அவையாவன, தரை மட்ட ஓசோன், துகள் மாசுபாடு, கார்பன் மோனொக்சைட், சல்பர் டை ஒக்சைட், நைதரசன் டை ஒக்சைட் என்பனவாகும்.

## நிறைவேறியது 'பட்ஜெட்'

### - ஆதரவாக 123, எதிராக - 80
### - கூட்டமைப்பு பங்கேற்கவில்லை!

கொழும்பு, டிசெ. 09

2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 43 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டது.

வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 123 வாக்குகளும் எதிராக 80 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இந்த வரவு - செலவு திட்டத்தில் பங்கேற்பதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

15

## காற்று மாசுபாட்டால் ஏற்படும் பாதிப்புகள்!

யாழ்ப்பாணம், டிசெ. 09

யாழ்ப்பாணத்தில் காற்று மாசுபாடு பி. எம். 2.5 என்ற அளவை எட்டியுள்ளது என்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்த சுற்றுச்சூழல்

15

## இலாபத்திலேயே மின்சார சபை; கட்டண உயர்வு தேவையில்லை!

### சம்பிக்க ரணவக்க எம். பி.

இலங்கை மின்சார சபை தற்போது இலாபம் ஈட்டி வருவதாகவும், மின்சார கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய அவசியம் தற்போது இல்லை எனவும் 43 ஆவது படையணியின் தலைவர் பாட்டலி

15

## தீவிர புயலாக மாறியது 'மண்டாஸ்'! இலங்கை பாதிக்க வாய்ப்பில்லை!

### வடக்கு, கிழக்கில் தொடர் மழை

யாழ்ப்பாணம், டிசெ. 09

மண்டாஸ் புயல் தீவிர புயலாக மாறியுள்ளது. இது இன்று நள்ளிரவுக்கு பின்னர் நாளை காலைக்கு முன்னர் கரையை கடக்கும். இதனால், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நாளை மறுதினம் வரை தொடர் மழைவீழ்ச்சி பதிவாகும் என்று யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல் துறை விரிவுரையாளர் நா. பிரதீப ராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

15

## பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை!

கொழும்பு, டிசெ. 09

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக இன்று வெள்ளிக்கிழமை பாடசாலைகளுக்கு விசேட விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச மற்றும் அரச அனுசரணை பெற்ற அனைத்து பாடசாலைகளுக்கும் இன்றைய தினம் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

## இப்படியும் நடக்கிறது...!

ஆறு. திருமுருகன் மீது இந்த ஊர்க்குருவிக்கு ஓர் ஆச்சரியமான பார்வை இருக்கின்றது. 'இந்த மனுசன் எப்படி இவற்றையெல்லாம் செய்கின்றார்' என்று அவரைப் பற்றிய செய்திகள் வருகின்றபோதெல்லாம் நினைத்துப் பார்ப்பதுண்டு.

ஒவ்வொரு நாளும் நித்திரையால் எழும்பும்போது இன்று என்ன புதிய திட்டத்தில் கால் பதிப்போம் என்று யோசித்துக் கொண்டுதான் எழும்புவாரோ தெரியவில்லை.

நாவற்குழியில் திருவாசக அரண்மனையை திறந்துவைத்த மறுகணமே அதற்கு முன்னால் அருங்காட்சியகம் ஒன்றுக்கு அடிக்கல் நாட்டினார். அதனை திறந்துவைத்த பின்னர், கீரிமலையில் வள்ளுவர் கோட்டத்துக்கு அடிக்கல் நாட்டினார்.

அதன் பணி நடந்துகொண்டிருக்க, கொக்கட்டிச்சோலையில் மற்றுமொரு திருவாசக அரண்மனை. நூறு சிவலிங்கங்களை பிரதிஷ்டை செய்யும் பணியைத் தொடக்கினார்.

கொக்கட்டிச்சோலையிலிருந்து வந்து மறுநாள் செம்மணியில் சிவலிங்க ஆலயம் குடமுழுக்கு.

வாழ்வையே ஆன்மீகப் பணிக்காக அர்ப்பணித்து வாழ்பவர் அவர். ஆனாலும் சிலவேளைகளில் சாது மிரண்டால் என்பது போல அவர் மிரண்டுவிடுவதுண்டு.

அண்மையில் சில காலமாக அவர் நமது சமூகத்தில் நடக்கும் கொடுமைகளைக் கண்டு கொதித்துப் போவதை காணமுடிகின்றது. நமது இளம் சந்ததி போதைக்கு அடிமையாவதைக் கண்டும், அதுகுறித்து அக்கறைப்படவேண்டிய தலைவர்கள் கண்டும் காணாமல் இருப்பது குறித்தும் தனது அதிருப்தியைப் பதிவுசெய்திருந்த திருமுருகனார், நேற்று முன்தினம் செம்மணி சந்தியில் சிவலிங்க ஆலய குடமுழுக்கின்போது தெரிவித்திருந்த கருத்துக்களை வெறுமனே கடந்துசெல்ல முடியவில்லை.

அந்த சிவலிங்க ஆலயத்தை அமைக்கின்றபோது தன்னை படையினர் விசாரணை செய்ததாக அவர் தெரிவித்திருந்தது வெறும் செய்திகள் மட்டுமல்ல. ஓர் இடத்தில் ஆலயத்தை அவர் அமைக்க முயன்றால் அதனைப் பற்றி கேள்வி கேட்கவோ அல்லது அப்படி அமைப்பதற்கான அனுமதியை சம்பந்தப்பட்டவர்களிடம் பெற்றிருக்கின்றாரா என்பதை சோதனை செய்வதோ சட்டம் ஒழுங்கு சம்பந்தப்பட்டது. அதாவது அது பொலிஸாரின் பணி. ஆனால், அதனை படையினர் எவ்வாறு கேள்விக்கு உட்படுத்தினர் என்பது தெரியவில்லை.

திருமுருகனார் இதற்கு முன்னரும் ஒரு முக்கிய பிரச்னை தொடர்பாக கருத்து தெரிவித்திருந்தார்.

வடக்கில் உள்ள வைத்தியசாலைகளில் மருந்துப் பொருட்களுக்கு நிலவும் தட்டுப்பாட்டை சுட்டிக்காட்டிய அவர், 'பாராளுமன்ற உரைகளினூடாக எதனையும் பெற்றுக்கொடுக்க முடியாது. எனவே, மக்கள் பிரதிநிதிகள் நோயுற்ற துன்பப்படும் மக்கள் மத்தியில் நேரில் சென்று அவர்களின் பிரச்னைகளை கேட்க வேண்டும்' என்று அழைப்பு விடுத்திருந்தார்.

அவரின் அந்த அழைப்பு சம்பந்தப்பட்டவர்கள் காதில் கேட்டிருக்குமோ தெரியவில்லை. ஆனால், அவர் விடுத்த அழைப்பு பலரை திரும்பிப் பார்க்க வைத்திருக்கின்றது என்று அறியமுடிந்தது. அவரின் இந்த கருத்து ஊடகங்களில் வெளிவந்த பின்னர், பலரும் வைத்தியசாலைகளின் அதிகாரிகளை தொடர்புகொண்டு உதவுவதற்கு முன்வந்ததாக ஒரு தகவல்.

பாராளுமன்றத்தில் நின்றுகொண்டு, 'குப்புற விழுந்து' கிடக்கும் இலங்கையின் பொருளாதாரத்தையே புலம்பெயர்ந்த தமிழர்களின் உதவியுடன் தூக்கி நிமிர்த்துகின்றோம் என்று வீராவேச பேச்சுப் பேசிக்கொண்டிருக்கும் நமது மக்கள் பிரதிநிதிகள், முதலில் இந்த சாமானியர்களின் உடனடி பிரச்னைக்கு என்ன செய்யலாம் என்று சிந்திக்க வேண்டாமா?

எடுத்ததற்கெல்லாம் அரசாங்கத்தை குறைகூறிக்கொண்டிருக்காமல் நமது மக்களை பாதுகாப்பதற்கு நம்மால் என்ன செய்ய முடியும் என்று சிந்திக்கவேண்டும்.

அரசாங்கம் இலவச சுகாதார சேவையை வழங்குகின்றது. மருந்துப் பொருட்களுக்கு நாடு முழுவதிலும் பற்றாக்குறை நிலவுகின்றது. மருந்துப் பொருட்கள் தெற்குக்கு அனுப்பப்பட்டு வடக்குக்கு கிடைக்கவில்லை என்றால் அது பாராளுமன்றத்தில் நின்றும் குரல் கொடுக்க வேண்டியதுதான். ஆனால், மருந்துப்பொருட்கள் நாடு முழுவதும் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னையாக இருக்கும்போது நமது மக்களுக்கு - நமது சக்திக்கு எப்படி உதவுவது என்று சிந்திக்கவேண்டும். ஆகக்குறைந்தது, புலம்பெயர் உறவுகளிடமாவது உதவியை நாடலாம். தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு உதவுவதற்கு அந்தப் பகுதியிலிருந்து புலம்பெயர்ந்தவர்களே உதவுவார்கள். அதுபோல் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள வைத்தியசாலைகளுக்கு உடனடி உதவிகளை அந்தந்தப் பகுதியைச் சேர்ந்த புலம்பெயர் உறவுகளே உதவ முன்வரலாம். ஆனால், அதனை இலகுபடுத்த அவர்கள் அனுப்புகின்ற மருந்துப் பொருட்கள் நேரடியாக அந்தந்த வைத்தியசாலைகளுக்கு கிடைக்கச் செய்ய நமது மக்கள் பிரதிநிதிகள் ஏற்பாடு செய்ய அரசாங்கத்துக்குக் கோரிக்கை வைக்கலாம்.!

சமஷ்டியை அடைவதும், வடக்கு - கிழக்கு இணைவதும் தேவைதான். அதுமாத்திரமல்ல மக்களுக்கு தேவையானது.!

- ஊர்க்குருவி

# குடும்ப வன்முறைகளால் பாதிக்கும் கர்ப்பவதி தாய்மார்கள் அதிகரிப்பு!

## மகப்பேறு மருத்துவர் லக்ஷ்மன்

கொழும்பு, டிசெ. 09

கர்ப்பவதி தாய்மார்கள் குடும்ப வன்முறைகளை அதிகம் எதிர்கொள்வதாகவும் தாக்குதலுக்கு உள்ளான கர்ப்பவதிகளுக்கு கருச்சிதைவு ஏற்படுவதுடன் நிறை குறைந்த குழந்தைகள் பிறக்கின்றனர். அவர்கள் இரத்தப் போக்கு போன்ற அபாயங்களை எதிர்நோக்குகின்றனர் என்று காசல் வீதி மகளிர் மருத்துவமனையின் மகப்பேறு மற்றும் மகப்பேறு மருத்துவ நிபுணர் லக்ஷ்மன் சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

50 சதவீதத்துக்கு அதிகமான பெண்கள் மருத்துவமனைக்கு வந்தும் அவர்கள் கணவர்களால் தாக்கப்பட்டமை தொடர்பில் தெரிவிக்க விரும்புவதில்லை.

காயங்களுடன் வைத்தியசாலைக்கு வரும் பெண்கள் பெரும்பாலும் கீழே வீழ்ந்து காயமடைவதாகக் கூறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

குறிப்பாக கர்ப்பவதி தாய்மார்கள் குடும்ப வன்முறைகளை அதிகம் எதிர்கொள்வதாகவும், தாக்குதலுக்கு உள்ளான கர்ப்பவதிகளுக்கு கருச்சிதைவு ஏற்படுவதுடன் நிறை குறைந்த குழந்தைகள் பிறக்கின்றனர். அவர்கள் இரத்தப் போக்கு போன்ற அபாயங்களை எதிர்நோக்குவதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் இதுபோன்ற துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் தற்கொலை எண்ணம் கொண்டவர்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# வட மாகாணம் தழுவிய விஞ்ஞானப் போட்டிகள்

யாழ்ப்பாணம், டிசெ. 09

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் வடக்கின் கல்வி மேம்பாட்டுக்கான செயல்பாடுகளின் ஒரு பகுதியாக 29ஆவது ஆண்டாக 2023ஆம் ஆண்டு பாடசாலை விஞ்ஞான போட்டிகளை நடத்தவுள்ளது.

ஜனவரி 4 முதல் பெப்ரவரி 24 வரை வடக்கில் உள்ள 12 கல்வி வலயங்களின் பாடசாலை மாணவர்களும் பங்கு கொண்டு பயன்பெறுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

போட்டி தொடர்பாக தெளிவுபடுத்தும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் ஊடக சந்திப்பு யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் இடம்பெற்றது. இதிலேயே ஏற்பாட்டாளர்கள் மேற்படி விடயத்தைத் தெரிவித்தனர்.

இதன்படி, முதலாம் பிரிவில் தரம் 6 முதல் 8 வரையும் இரண்டாம் பிரிவில் தரம் 9 முதல் 11வரையும் மூன்றாம் பிரிவில் தரம் 12 முதல்13 வரையும் என மூன்று பிரிவுகளாக கண்காட்சிப் போட்டி, சுவரொட்டி போட்டி பாடசாலைத் தோட்டப் போட்டி, ஆவணப்படப்ப போட்டி, வினாவிடைப்போட்டி, புனைகதைப் போட்டி, பேச்சு போட்டி, கைபேசி புகைப்படப் போட்டி என்பன இடம்பெறவுள்ளன.

போட்டிகளில் பங்கு கொள்ள விரும்பும் மாணவர்கள் பாடசாலை அதிபரைத் தொடர்பு கொள்ளமுடியும். ஒவ்வொரு வலயத்திலும் உள்ள விஞ்ஞான பாடத்துக்குப் பொறுப்பாக உள்ளவர்கள் ஆர்வமுள்ள மாணவர்களை போட்டியில் பங்குகொள்ள ஏற்பாடுகளை செய்வார்கள். விஞ்ஞான சங்கத்தின் போட்டிகளில் பங்கு கொள்ள எந்த வொரு கட்டணத்தையும் செலுத்தத் தேவையில்லை. இலவசமாக போட்டியில் பங்கு கொள்ளலாம்.

போட்டிகள் பற்றிய மேலதிக விபரங்களை https://www.thejsa.org இணையத்தளத்தில் காணலாம்.

போட்டிகளுக்கான அனுசரணையை ரட்ணம் பவுண்டேசன், வன்னி ஹோப் என்பன வழங்குகின்றன.

பொருளாதார நெருக்கடியில் சிறப்பான தொடர்பாடலுக்கான மாற்று முறைமைகளை கண்டுகொள்ளல், சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகள், சக்திவள மேம்பாடு, கழிவுப் பொருள் அகற்றல், மீள்சுழற்சி, மீளுருவாக்கம், வீட்டுத் தோட்ட உற்பத்தி, புதிய கண்டுபிடிப்புக்கள், தொழில்நுட்பங்களை புரிந்து கொள்ளுதல், விஞ்ஞான கற்பனையை வளர்த்தெடுத்தல், சமூகத்தை நுணுகி ஆராய்தல், சாதாரண வாழ்வியலிலிருந்து கற்றுக்கொள்ளுதல், இயற்கையைப் புரிந்து கொள்ளுதல், பொது அறிவை வளர்த்தல், உலகின் கண்டுபிடிப்புக்களை புரிந்து கொள்ளுதல், குறிப்பாக விஞ்ஞானம் சார்ந்த அறிவை மேம்படுத்தல், உள்ளூர் அறிவுகளை கண்டு கொள்ளுதல், மேம்படுத்தல், மனிதர்களைப் புரிதல் போன்ற பல அறிவியல் சார்ந்த நோக்கங்களைக் கொண்டு எட்டு வகையான போட்டிகளை யாழப்பாண விஞ்ஞானச் சங்கம் இந்த ஆண்டு நடத்தத் தீர்மானித்துள்ளது - என்றும் தெரிவிக்கப்பட்டது.

## போராளிகள் நலன்புரி சங்கம் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 09

போராளிகள் நலன்புரி சங்கம் அறிமுக நிகழ்வும் நிர்வாக தெரிவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

நல்லூர் இளம் கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் சங்கத்தின் எதிர்கால வேலைத்திட்டம் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது. (ஐ)





இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய நூற்றாண்டு நிறுவுநர் தினமும் பரிசளிப்பு நிகழ்வும் அதிபர் இ. கணேசானந்தன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில், பிரதமவிருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராசா கலந்துகொண்டார்.

ஈழநாடு
Eelanadu
09.12.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 23

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# ஜெய்சங்கர் கூறுவதை புரிந்துகொள்ள முடிகின்றதா?

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர், இந்திய பாராளுமன்றத்தில் பேசுகின்ற போது, இந்தியாவின் அணுகுமுறையை தெளிவுபடுத்தியிருக்கின்றார். ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில், ஏன் இந்தியா ஆதரவாக வாக்களிக்கவில்லை என்னும் கேள்விக்கு பதிலளிக்கும் போதே, அவர் இந்தியாவின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியிருக்கின்றார். அதாவது, இந்தியாவின் அணுகுமுறை முழு இலங்கைக்குமானது. அதில் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஏனைய மக்களும் அடங்குகின்றனர். எமது அணுகுமுறை இனத்துவ அடிப்படையிலானதல்ல. இதற்கு முன்னர் இருந்தவர்களும் இவ்வாறுதான் அணுகி வந்திருக்கின்றனர்.

இந்தியாவின் வெளிவிவகார அணுகுமுறையை அவதானித்து வருபவர்களுக்கு இது புதிய விடயமல்ல. இந்திரா காந்தி காலத்திலிருந்து இந்தியாவின் அணுகுமுறை இவ்வாறுதான் இருந்திருக்கின்றது. ஆனால், அன்றைய சூழலில் இந்திரா காந்தி, நியாயமானதோர் அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். இந்தப் பின்புலத்தில் கொழும்பை இறங்கிவரச் செய்யும் நோக்கில்தான் சில அழுத்தங்களையும் பிரயோகித்தார். இதற்கு அப்போதிருந்த இலங்கையின் ஆட்சியாளர் ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் வெளிவிவகார அணுகுமுறையும் பிரதான காரணமாகும். பின்னர், ராஜீவ் காந்தியும் தாயின் வழியிலேயே விடயங்களை கையாள முயற்சித்தார்.

இந்திரா காந்தி காலத்து அணுகுமுறையும் ராஜீவ் காந்தி காலத்தின் அணுகுமுறையும் ஒரு விடயத்தில் உடன்பாடு கொண்டிருந்தது. அதாவது, சிங்களவர்களை ஏதோவொரு வகையில் அனுசரித்தே விடயங்களைக் கையாள வேண்டும். ஒரு நட்பு நாட்டை எந்தளவு அழுத்த முடியுமோ அந்தளவுக்கே கொழும்பின்மீது அழுத்தங்களை பிரயோகித்தது. ஆனாலும், நட்புக்கான வரையறைகளை தாண்டியே சில விடயங்களை மேற்கொண்டது. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் அணுகுமுறையே அதற்கான காரணமாகும். ஒருவேளை, ஜே. ஆர்., அன்றைய உலக அரசியல் சூழலில் இந்தியாவின் கரிசனைகளை அனுசரித்துச் சென்றிருந்தால் இராணுவ ரீதியான தலையீட்டை இந்தியா செய்திருக்காது. ஜே. ஆர். எல்லைக் கோட்டை மீறிய காரணத்தால் இந்தியாவும் அதன் நட்பின் எல்லையை மீறியது. அவ்வாறான சூழலில்கூட, முற்றிலுமாக சிங்களவர்களை புறம்தள்ளாத வகையிலேயே புதுடில்லி விடயங்களை கையாண்டது.

இந்தியாவில் இருப்பது போன்றதோர் அரசியல் ஏற்பாட்டையே ஈழத் தமிழர்களுக்கு பெற்றுக்கொடுக்க முயற்சித்தது. இந்த அடிப்படையில்தான் மாகாண சபை முறைமையை ஓர் அரசியல் தீர்வாக முன்வைத்தது. புலிகள் - இந்திய மோதலை தொடர்ந்து இந்தியா எட்ட நிற்கும் சூழல் ஏற்பட்டது. 90களுக்கு பின்னரான உள்நாட்டு யுத்தத்தின் போது, இந்தியாவின் அரசியல் ஊடாட்டம் கொழும்புடன் மட்டுமே மட்டுப்பட்டிருந்தது. 2009இற்கு பின்னரான சூழலில் தான் தமிழர் தரப்பு இந்தியாவுடன் வெளிப்படையான அரசியல் தொடர்புகளை மேற்கொண்டது.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டில் பெரியளவில் மாற்றங்கள் ஏற்படவில்லை. முன்னைய அணுகுமுறையிலேயே இப்போதும் விடயங்களை அணுகிவருகின்றது. 13ஆவது திருத்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டே விடயங்களை நோக்குகின்றது. 13ஆவது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னோக்கி பயணிப்பதில் இந்தியாவுக்கு பிரச்னையில்லை. ஆனால், இந்தியா ஈழத் தமிழர் விடயத்தில் தலையீடு செய்வதற்கான அடிப்படையாக அதுதான் எப்போதுமே இருக்கும். ஈழத் தமிழ் மக்களுக்கு நியாயமானதோர் அரசியல் தீர்வை பெற்றுக்கொடுப்பதே இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் இலக்காகும்.

இந்தப் பின்புலத்தில் இந்தியாவின் தலையீடு அல்லது ஈடுபாட்டுக்கான வேராக எப்போதுமே இந்திய - இலங்கை ஒப்பந்தமே இருக்கும். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றவர்கள் கூறுவது போன்று, இந்திய - இலங்கை ஒப்பந்தமும் 13ஆவது திருத்தச் சட்டமும் வேறுவேறல்ல. அப்படி இந்தியா கருதவில்லை - கருதவும் மாட்டாது. ஏனெனில், அந்த ஒப்பந்தம் கொண்டு வரப்பட்டதன் நோக்கம் இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வை காண்பதாகும். இந்தியாவை பொறுத்தவரையில் அந்தத் தீர்வு ஏற்கனவே, காணப்பட்டுவிட்டது. அதுதான் 13ஆவது திருத்தச்சட்டம். ஆனால், அதனை நடைமுறைப்படுத்துவதிலும், அதிலிருந்து முன்னோக்கி பயணிப்பதிலுமே பிரச்னைகள் இருக்கின்றன. இந்த அடிப்படையில் ஜெய்சங்கரின் வாதத்தை உற்று நோக்குவோமானால் இதற்கு முன்னர் இருந்தவர்கள் எவ்வாறு விடயங்களை அணுகினார்களோ. அது போன்றுதான் தற்போதைய பி. ஜே. பி. அரசாங்கமும் விடயங்களை அணுகிவருகின்றது. இதுதான் இந்தியாவின் நிலைப்பாடாகும்.

# பொருளாதார நெருக்கடியை ரணில் தீர்ப்பார் என்ற நகைச்சுவையை சபையில் தவிருங்கள்

## அநுரகுமார திஸநாயக்க

*கொழும்பு, டிசெ. 09*

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பார் என நகைச்சுவை கருத்தை சபையில் குறிப்பிடுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். வெளிநாட்டு கடன்களை செலுத்தாமல் தான் தற்போது எரிபொருள், எரிவாயு இறக்குமதி செய்யப்படுகிறது. இதுவே நாட்டின் பொருளாதார உண்மை நிலை என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு - செலவு திட்ட உரையின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டின் பொருளாதாரம் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது என்பது புதிய விடயமல்ல. பொருளாதார நெருக்கடியை முகாமைத்துவம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் பேச்சளவில் குறிப்பிடுகிறதே தவிர நடைமுறையில் எந்த திட்டங்களும் இதுவரை செயல்படுத்தப்படவில்லை. உண்மை காரணிகளை மறைத்ததால் நாடு மிக மோசமாக பாதிக்கப்பட்டது என்பதை அரசாங்கம் மறந்து விடக் கூடாது.

எரிபொருள், எரிவாயு ஆகியவற்றுக்கான வரிசை இல்லை. அத்தியாவசிய பொருள் இறக்குமதி தடையில்லாமல் இடம்பெறுகிறது ஆகவே, பொருளாதார பாதிப்பை முகாமைத்துவம் செய்துக் கொண்டோம் என அரசாங்கம் குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

வெளிநாட்டு கடன்களை செலுத்த முடியாது, நாங்கள் வங்குரோத்து நிலை அடைந்து விட்டோம் என அரசாங்கம் கடந்த ஏப்ரல் 12ஆம் திகதி அறிவித்தது. செலுத்தாத கடன் தொகையை கொண்டு எரிபொருள் மற்றும் எரிவாயு இறக்குமதி செய்யப்படுகின்றது.

கடந்த மார்ச் மாதம் அரசமுறை கடன்களை செலுத்திய நிலையில் தான் எரிபொருள், எரிவாயு உட்பட அத்தியாவசிய பொருள் இறக்குமதியில் பாதிப்பு ஏற்பட்டது, ஆனால் தற்போது வெளிநாட்டு கடன்களை செலுத்தாமல் எரிவாயு, எரிபொருள் கிடைப்பனவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதுவே நாட்டின் இன்றைய பொருளாதார உண்மை நிலை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பார் என நகைச்சுவை கருத்தை சபையில் குறிப்பிட வேண்டாம்.

பொருளாதார பாதிப்பு மூடி மறைக்கப்பட்டுள்ளது. சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் பொருளாதார ரீதியில் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். வரி அதிகரிப்பினால் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இது பொருளாதார பாதிப்பை மேலும் தீவிரப்படுத்தும். அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்தால் நடுத்தர மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் - என்றார். (ஐ)

# விஞ்ஞானம், கணிதப் பிரிவுகளை தெரிவு செய்வோர் குறைவடைவு!

*யாழ்ப்பாணம், டிசெ. 09*

வடக்கில், விஞ்ஞான மற்றும் கணித பிரிவுகளை தெரிவு செய்பவரின் எண்ணிக்கை குறைவடைந்து காணப்படுகின்றது. பொருளாதார ரீதியில் முன்னேற வேண்டுமானால் விஞ்ஞான துறையில் வளர்ச்சியடைய வேண்டும் என்று மருத்துவபீடத்தின் பீடாதிபதியும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் முன்னாள் தலைவருமான மருத்துவர் சுரேந்திரகுமரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் ஊடக சந்திப்பு யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே இதனை தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலை மட்டங்களில் விஞ்ஞான ரீதியான போட்டிகள் ஒரு பாலமாக அமைகின்றன. இந்த பாலத்தில் அனைத்து தரப்பினரும் ஒன்று சேர்ந்து கொள்ள வேண்டும். சிறிய பாடசாலைகள் பெரிய பாடசாலைகள் இல் லாது வர்க்கம் அல்லாது அனைத்து பாடசாலைகளும் இதில் இணைந்து கொள்ள வேண்டும். மாணவர்களை இதில் பங்குபற்ற ஊக்கு விக்க வேண்டும். பாடசாலை மாணவர் மத்தியில் விஞ்ஞான பாட அறிவை வளர்க்க வேண்டும்.

அண்மைய நாட்களில் விஞ்ஞான மற்றும் கணித பிரிவுகளை தெரிவு செய்பவரின் எண்ணிக்கை குறைவடைந்து காணப்படுகின்றது. இதனை விருத்தி செய்வதற்காக பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதனைவிடக் கூடுதலாக மாணவர்கள் அவர்களுடைய எதிர்காலத்தில் என்னவாக வரப் போகிறார்கள் என்ற சம்பந்தமான பல விழிப்புணர்வு நடவடிக்கைகளை நாங்கள் செய்து கொண்டிருக்கின்றோம்.

முக்கியமாக போதைப் பொருள் பாவனைக்கு உள்ளாகியுள்ள நிலையை அடிப்படையாக வைத்துக்கொண்டு அவர்களுடைய வாழ்க்கை முறைமையை விருத்தி செய்வதற்கு அந்த வாழ்க்கை திறனை சிறப்பாக கொண்டு போவதற்கான முயற்சிகளை செய்வதிலும் முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கின்றோம். அதனூடாகவும் இவர்களுடைய எதிர் காலத் தில் என்னவாக பெற வரப்போகின்றார்கள் என்பதனை விருத்தி செய்வதற்கான முயற்சிக ளையும் பல்கலைக்கழகம் பல பீடங்க ளுடன் இணைந்த திட்டமாக சமூகத்திற்கு எடுத்து செல்வதற்கான முயற்சியிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம் - என்றார். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
வழக்கமான செயல்கள் வெற்றியாகும். புதிய நட்புகளால் ஆதாயம் அடைவீர்கள். குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பம் விலகும். தடைபட்டிருந்த செயல்கள் நிறைவேறும். லாபம் அதிகரிக்கும்.

**இடபம்**
மனதில் புதிய திட்டங்கள் உருவாகும். நண்பர்களின் ஆதரவை நாடுவீர்கள். மற்றவரை அனுசரித்துச் செல்வதால் நன்மையுண்டு. உடன் பணிபுரிபவர்களுடன் மோதல் நிலை உண்டாகலாம்.

**மிதுனம்**
எதிர்பார்த்தவற்றில் ஏமாற்றத்தை சந்திக்க வேண்டியதாக இருக்கும். அலைச்சல் அதிகரிக்கும். உங்களது பெருமைக்காக ஆடம்பர செலவுகள் செய்வீர்கள். நட்பு வட்டம் விரிவடையும்

**கடகம்**
எதிர்பார்த்த பணம் வந்து சேரும். வெளி வட்டாரத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். விஐபிகளின் ஆதரவுடன் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். வியாபாரத்தில் இருந்த நெருக்கடிகள் விலகும்.

**சிம்மம்**
தொழிலில் இருந்த தடைகள் அனைத்தும் விலகும். லாபமான நாள். பணியிடத்தில் உங்களுக்கு மதிப்பு உண்டாகும். உங்கள் தேவைகள் நிறைவேறும். சிந்தித்து செயல்படுவீர்கள்.

**கன்னி**
நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி வெற்றியாகும். பழைய அனுபவங்கள் கை கொடுக்கும். எதிர்பார்த்த இடத்தில் இருந்து உதவிகள் வந்து சேரும். சிலருக்கு வேலை குறித்த செய்தி வரும்.

**துலாம்**
கவனமுடன் செயல்பட வேண்டிய நாள். பிறரை அனுசரித்து செல்வது நல்லது. பணியிடத்தில் சில பிரச்னைகளை சந்திக்க நேரும். செயல்களில் தடுமாற்றமும் குழப்பமும் அதிகரிக்கும்.

**விருட்சிகம்**
நண்பர்கள் உதவியுடன் ஒரு முயற்சியை மேற்கொள்வீர்கள். உங்கள் எண்ணம் நிறைவேறும். புதிய செயல்கள் வெற்றியாகும். வாழ்க்கைத் துணையுடன் ஏற்பட்ட முரண்பாடு விலகும்.

**தனுசு**
நீங்கள் எதிர்பார்த்தவை இன்று நிறைவேறும். வருவாய் அதிகரிக்கும். இன்று மற்றவர்களால் முடியாத வியாபாரத்தில் நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி வெற்றியாகும்.

**மகரம்**
உங்கள் திறமை வெளிப்படும் நாள். குடும்பத்தினர் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். உங்கள் செயல்கள் வெற்றியாகும். நிதிநிலை உயரும்.

**கும்பம்**
திட்டமிட்ட செயல்களை செய்து முடிப்பீர்கள். தாயாரின் உடல் நிலையில் கவனம் தேவை. ஆரோக்கியத்தில் பின்னடைவு உண்டாகும். மறைமுக எதிரிகளால் சில சங்கடங்கள் தோன்றும்.

**மீனம்**
தைரியத்துடன் செயல்படுவீர்கள். நினைத்ததை நடத்தி முடித்து ஆதாயம் காண்பீர்கள். வியாபாரத்தை விரிவு செய்யும் முயற்சி நிறைவேறும். உங்களது திறமை வெளிப்படும்.

# தமிழகத்தில் பல இடங்களில் குண்டு வெடிக்க வைக்க சதி!

## முபீனின் நண்பர்கள் விசாரணையில் தகவல்

கோவை, டிசெ. 09

கோவை கோட்டை ஈஸ்வரன் கோவில் முன்பாக கடந்த ஒக்ரோபர் 23ஆம் திகதி கார் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. இதில், கோவையில் தாக்குதல் ஒன்றை நடத்த திட்டமிட்டிருந்த நிலையில் முபின் என்பவர் உயிரிழந்தார்.

இந்த சம்பவத்தை தேசிய புலனாய்வு பிரிவு விசாரித்து வருகிறது. இதுவரை 50க்கும் அதிகமானவர்களிடம் விசாரணை நடைபெற்றது.

இந்த சம்பவம் தொடர்பில் 50 பேர் விசாரிக்கப்பட்டனர். 43 இடங்களில் சோதனை நடத்தப்பட்டது. இந்த விசாரணைகளில் அண்மையில் கோவையில் மூவரை பொலிஸார் கைது செய்தனர்.

இவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில், முபினுடன் சேர்ந்து அவர்கள் வெடிகுண்டு தாக்குதல் நடத்தத் திட்டமிட்டமை தெரிய வந்தது. அவர்கள் பல முக்கிய இடங்களில் குண்டுகளை வெடிக்க வைக்கத் திட்டமிட்டிருந்தனர் என்றும் அறிய வந்துள்ளது.

இவர்களின் வீட்டிலிருந்து வெடிபொருட்கள் தயாரித்தல், வெடிக்க வைத்தல் நுட்பங்கள் கொண்ட கையேடுகளையும் புலனாய்வு பிரிவினர் கைப்பற்றியுள்ளனர். (ஐ)

# தமிழ்நாடு அரசுக்கு எதிராக சாகும்வரை உண்ணாவிரதம்!

## அண்ணாமலை தெரிவிப்பு



கோவை, டிசெ. 09

தமிழக அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பேன் என பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை பேசினார்.

கோவை மாவட்டம் அன்னூரில் தமிழக அரசு சார்பில் விளைநிலங்களில் தொழிற்பேட்டை அமைக்க எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தி வரும் விவசாயிகளுக்கு ஆதரவு தெரிவித்து, பாரதிய ஜனதா கட்சியின் மாநில தலைவர் அண்ணாமலை தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஆர்ப்பாட்டத்தில் அண்ணாமலை பேசியதாவது:

விவசாயம் செய்யும் பெண் பணியை விடுத்து பசியுடனும் வயிற்றெரிச்சலுடனும் தரையில் அமர்ந்து யோசிக்க தொடங்கினால், கோட்டை உள்பட என்ன மாற்றங்கள் நடக்க வேண்டுமோ, அவை அனைத்தும் நடக்கும்.

நாங்கள் ஏற்கெனவே ஒரு முறை விவசாயிகளை சந்தித்து சென்றோம். இதை அறிந்து தமிழக அரசு தொழிற்பேட்டை அமைக்கும் நடவடிக்கையை தற்காலிகமாக நிறுத்திவைத்தது. தற்போது மீண்டும் தொடங்கியுள்ளது.

விவசாயத்தை வாழ்வாதாரமாக பார்க்க வேண்டும். தி. மு. க. அரசுக்கு இது தெரிய வாய்ப்பில்லை. விவசாயிகளை புரிந்து நடந்தவர் காமராஜர் தான். தண்ணீர் வசதி இருந்தால் தரிசு நிலத்தைகூட விளைநிலங்களாக மாற்றிவிடலாம். இதை கருத்தில் கொண்டே தமிழகத்தில் பல அணைகள், கால்வாய்களை கட்டினார்.

எதிர்ப்பை மீறி அன்னூரில் தொழிற்பேட்டை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டால் சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பேன். ஒரு பிடி மண்ணைக்கூட எடுக்க விட மாட்டோம் - என்றார். (ஐ)

# என்னை நம்பி வாக்களித்தோருக்கு நாம் உண்மையாக இருக்கின்றோம்!

## முதலமைச்சர் ஸ்டாலின்



தென்காசி, டிசெ. 09

என்னை நம்பி வாக்களித்த மக்களுக்கு நாங்கள் உண்மையாக இருக்கிறோம் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

தென்காசி மாவட்டங்களில் பல்வேறு நிகழ்வுகளை தொடக்கி வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஆட்சிக்கு வந்து 19 மாதங்களில் பல்வேறு சாதனைகள் செய்யப்பட்டுள்ளது. இல்லம் தேடி கல்வித் திட்டத்தின் கீழ் 50,390 மாணவர்கள் பலன் பெற்றுள்ளனர். உங்கள் முதல்வர் திட்டத்தின் கீழ் 11,490 மனுக்கள் பெறப்பட்டு 11,400 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் எரிச்சலால் கேட்கும் கேள்விகளுக்கு நான் பதில் அளிக்க விரும்பவில்லை. என்னை நம்பி வாக்களித்த மக்களுக்கு நாங்கள் உண்மையாக இருக்கிறோம் - என்றார்.

# அன்புமணியின் ஆட்சி அமைய செய்ய வேண்டியவை அதிகம்!

## பா. ம. கவின் ராமதாஸ்

சென்னை, டிசெ. 09

அன்புமணியின் ஆட்சி அமைவதற்கு செய்ய வேண்டிய பணிகள் அதிகமாக இருக்கிறது என்று டாக்டர் ராமதாஸ் கூறியுள்ளார்.

பாட்டாளி மக்கள் கட்சியில் பா. ஜ. க.விலிருந்து விலகிய உறுப்பினர்களை மீண்டும் இணைக்கும் நிகழ்வில் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது, தாய் வீட்டுக்கு வந்துள்ள பா.ம.க. சொந்தங்கள் அனைவரையும் வரவேற்கிறேன். திருவள்ளூர் மாவட்டத்தை பா.ம.கவின் கோட்டையாக மாற்றி காட்டியவர் ரவிராஜ் , சில மாதங்களாக பா.ம.க.வில் இல்லை என்பது வருத்தம் தான். ஆனால் அவர் நெஞ்சத்தில் நானும், என்னுடைய நெஞ்சில் அவரும் உள்ளார்.

அன்புமணியின் ஆட்சி அமைய செய்ய வேண்டிய பணிகள் அதிகமாக இருக்கின்றன. சரியான தருணத்தில்தான்,



ரவிராஜ் தாயை தேடி வந்துவிட்டார். அவரின் மாவட்டத்தில் சிறப்பாக செயல்பட வரவேற்கிறேன் - என்றார். (ஐ)

# யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவில் காற்றின் தரம் ஆரோக்கியமற்ற நிலையில்!

கொழும்பு, டிசெ. 09

கொழும்பு, கேகாலை, தம்புள்ளை, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் உட்பட இலங்கையின் பல நகரங்களில் காற்றின் தரம் ஆரோக்கியமற்ற மட்டத்தில் உள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத் தால் வெளி யிடப்பட்ட மாறும் காற்றின் தர வரைபடத்தின்படி, பத்தரமுல்லை மற் றும் மன்னாரில் காற்றின் தரம் மிகவும் ஆரோக்கியமற்ற நிலையில் காணப்படு கிறது.

காலை 6 மணி அவதானிப்புகளின் படி, பத்தர முல்லை மற்றும் மன்னார் 118 என்ற எண் மதிப்பைப் பதிவு செய்தது. இது மிகவும் ஆரோக்கியமற்ற அளவை விட அதிகமானது.

ஊதா நிற எச்சரிக்கை, காற்றின் தரம் மிகவும் ஆரோக் கியமற்ற நிலையில் இருப்பதைக் குறிக்கிறது, எண் நிலை 70 மற்றும் 87 க்கு இடையில் இருக்கும் போது வெளியிடப்படுகிறது.

எவ்வாறாயினும், பத்தரமுல்லை மற்றும் மன்னாரில் காற்றின் தரம் மட் டத்தை விட அதிகமாக உள்ளது.

இதேவேளை, கேகாலை, தம்புள்ளை, யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் காற்றின் தரம் ஆரோக்கியமற்ற மட்டத்தில் உள்ளது.

பதுளையில் காற்றின் தரம் திருப்தி கரமாக இருப்பதாகக் கருதப்படுகிறது மற்றும் காற்று மாசுபாடு சிறிய அல்லது எந்த ஆபத்தையும் ஏற்படுத்தாது.

இதற்கிடையில், கொழும்பு மற்றும் பல முக்கிய நகரங்களில் காற்றின் தரம் அண்மைய நாட்களில் மோசமடைந் துள்ளதால் பொதுமக்களுக்கு கடுமை யான உடல்நல சிக்கல்கள் ஏற்படும் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இதேவேளை, இலங்கையில் ஏற்பட் டுள்ள காற்று மாசுபாட்டின் அளவு அதி கரிப்பதற்கு இந்தியாவில் ஏற்பட்டுள்ள காற்று மாசுபாடு காரணமாக ஏற்பட்டுள் ளதாக உள்ளூர் நிபுணர்கள் தெரிவிக் கின்றனர்.

இந்தியாவின் தலைநகரான டில்லி யில் காற்று மாசுபாடு அபாயகரமாக அதிகரித்து வருவதாக ஆராய்ச்சி சுட்டிக் காட்டியுள்ளது. (அ)

## நாட்டின் பிரதான நகரங்களில் வளி மாசடைதல் அதிகரிப்பு!

கொழும்பு, டிசெ. 09

கொழும்பு நகர் உள்ளிட்ட பிரதான நகரங்கள் சிலவற்றில் வளி மாசடைதல் மேலும் அதிகரித்துள்ளது.

அதற்கமைய, நாட்டின் பல பிரதேசங்களில் வளி மாசு பாட்டு தரக்குறியீடு 150 முதல் 200 புள்ளிகளாக காணப்படு வதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

நாட்டை சூழவுள்ள வளி மண்டலத்தில் ஏற்பட்டுள்ள தாழமுக்க நிலையும் இதற்கு காரணம் என தேசிய கட்டட ஆய்வு நிறுவகத்தின் வளி மாசுபாடு முகாமைத்துவப் பிரிவின் தலைமை ஆய்வாளர் சரத் பிரேமசிறி குறிப்பிட்டார்.

வளி மாசடைதல், சுவாச நோய்களினால் பாதிக்கப்பட் டுள்ளவர்களுக்கு மேலும் தாக் கத்தை ஏற்படுத்தக்கூடும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

வீடுகளிலிருந்து வெளியே செல்லும் சந்தர்ப்பங்களில் முகக்கவசத்தை அணிவதன் மூலம் நச்சு வாயு பாதிப்பை தவிர்த்துக்கொள்ளமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மின் துண்டிப்பு என்று மிரட்டி கட்டணத்தை உயர்த்த முயற்சி

### பொதுப் பயன்பாடு ஆணைக்குழு சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 09

**நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களின் ஊழியர்களுக்கு பணிக்கொடை மற்றும் போனஸ் வழங்கமுடியாது என கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், மின் சார சபையும் நட்டத்தில் இயங்கும் நிறுவனம் என்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க நேற்றுத் தெரிவித்தார்.**

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சுயாதீனமானவர் களின் கைகளில் இருக்கும் வரை மூன்றாம் தரப்பினருக்கு மின்சாரக் கட்டணத்தை உயர்த்த இடமளிக்கப்படமாட் டாது எனத் தெரிவித்த அவர், 2017ஆம் ஆண்டு மின் கட் டணத்தை உயர்த்துமாறு தாம் கோரிக்கை விடுக்கும் வரையில் எவரும் அவ்வாறான கோரிக் கையை முன்வைக்கவில்லை எனவும், அவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டதாக கூறப்படும் கூற்றுகள் தவறானவை என்றும் கூறினார்.

ஏழு, எட்டு மணிநேரம் மின் வெட்டு ஏற்படும் என்ற அச் சத்தை பரப்பி கட்டணத்தை அதிகரிக்க விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் தயா ராகி வருவதாகவும், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அவ்வாறான அழுத்தங்களுக்கு ஒருபோதும் அடிபணியாது எனவும் ஜானக ரத்நாயக்க மேலும் தெரிவித்தார். (அ)

## போதைப்பொருள் பாவனை பற்றிய கருத்தரங்கு யாழ். மருத்துவபீடத்தில்

யாழ்ப்பாணம், டிசெ. 09

யாழ் பல்கலைக்கழக மருத் துவபீட மாணவர் நன்னடத்தை மற்றும் நல்வாழ்வு மையமும், தனி நபர் தொழில்முறை விருத் திக்கான துறையும் இணைந்து நடாத்தும் போதைப் பொருள் பாவனை அதன் பல்வகைக் கண்ணோட்டமும் பிரதிபலிப்பு களும் என்ற தலைப்பிலான கருத்தரங்கு இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத் துவ பீட கூவர் அரங்கில் நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசி ரியர் சி .ஸ்ரீசற்குணராஜாவும், சிறப்பு விருந்தினராக மருத் துவ பீடாதிபதி பேராசிரியர். இ. சுரேந்திரகுமாரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில், "தற்காலத் தில் போதை பொருள் பற்றிய நிலவரமும் அது தொடர்பான எமது நட வடிக்கைகளும்" பற்றி வைத்தியர் க.குமரனும், "மனித உரிமைகளும் போதைப் பொரு ளுக்கு அடிமையாதலும்" பற்றி முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளரும், சட்டத்தரணி யுமான அம்பிகா சற்குணநாத னும், "போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் தொடர் பான சட்டம் சார்ந்த ஓர் அறி முகம்" பற்றி குற்றவியல் நீதி மன்ற நீதவான் அ .அ.ஆனந்த ராஜாவும், "போதைப் பொரு ளுக்கு அடிமையான வர்களின் உளவியல் அம்சங்கள்" பற்றி யாழ் போதனா வைத்திய சாலை மன நல வைத்திய நிபுணர் டி உமாகரனும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.(அ)

## யாழில் ஹெரோயினுடன் பெண் ஒருவர் சிக்கினார்

யாழ்ப்பாணம், டிசெ. 09

யாழ்ப்பாணம், குப்பிழான் பகுதியில் 130 கிராம் ஹெரோ யின் போதைப்பொருளுடன் 38 வயதான பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.மாவட்ட போதை தடுப்புப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கைது செய்யப்பட்ட பெண்ணையும் , பெண்ணிடம் மீட்கப்பட்ட போதைப்பொருளையும் யாழ்.மாவட்ட போதை தடுப்புப் பிரிவினர் மேலதிக நடவடிக்கைக்காக சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (அ)

## இலங்கையில் குற்ற சுட்டெண் 4.64 சத வீதமாக அதிகரித்தது

கொழும்பு, டிசெ. 09

ஒழுங்கமைக்கப்பட்ட குற் றங்கள் நிகழும் நாடுகளில் இலங்கை 6ஆவது நாடாக இருப்பதாக தெரியவந்துள்ளது.

தென்கிழக்கு ஆசியாவில் சர்வதேச பொலிஸாருடன் தொடர்புடைய 'நார்க்' வெளி யிட்ட அறிக்கையிலேயே இவ் வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கையில் குற்றச் சுட்டெண் 4.64 சத வீத மாக அதிகரித்துள்ளது.

மேலும் இலங்கையில் 30 பாதாள உலகக் குழுக்கள் உள்ள தாகவும் குறிபிடப்பட்டுள் ளது. (அ)

## பசறையில் 'மினி சூறாவளி'

கொழும்பு, டிசெ. 09

பசறை, லுணுகலை உள் ளிட்ட தோட்டப் பகுதிகளில் நேற்று முன் தினம் இரவு முதல் திடீரென வீசிவரும் பலத்த காற்று காரணமாக பாதிக்கப் பட்டுள்ள மக்களுக்கு உடனடி யாக உதவிகளை வழங்குமாறு மாவட்ட அதிபருக்கு இ.தொ. கா தலைவர் செந்தில் தொண்ட மான் பணிப்புரை விடுத்துள் ளார்.

வீடுகளுக்கு ஏற்பட்டுள்ள சேதம் காரணமாக பாதிக்கப் பட்டுள்ள மக்களை மாற்று இடங்களில் தங்கவைப்பதுடன் அவர்களுக்கான உலர் உணவு களை வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்வ தோடு,சேதமடைந்த வீடுகளை சீர்திருத்துவதற்கான நடவ டிக்கை எடுக்குமாறும் அவர்



கோரியுள்ளார்.

அத்துடன் இப்பகுதிகளில் உள்ள பாடசாலைகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மாண வர்களின் பாதுகாப்பை கருத் திற்கொண்டு, பாடசாலையை திருத்துவதற்கான உரிய நட வடிக்கைகளை எடுக்குமாறு ஊவா மாகாண சபையின் பிர தம செயலாளரிடமும் அவர் வேண்டுகோள் விடுத்தார். (அ)

## மின் கட்டணத்தை உயர்த்துமாறு மின்சார சபையும் வலியுறுத்தல்

கொழும்பு, டிசெ. 09

மின்சார கட்டணத்தை அதி கரிக்கவேண்டியது அவசியம் என மின்சார சபையின் தலை வர் நலிந்த இலங்கக்கோன் வலியுறுத்தியுள்ளார்.

மின்சக்தி அமைச்சருடனான கலந்துரையாடலின் பின்னர் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இது குறித்து தெளிவு படுத்தினார்.

மின் உற்பத்திக்கு தேவை யான நிலக்கரியும் போதுமான டீசலும் இல்லை எனவும் பாரிய நிதி தேவைப் படுவதாக வும் நலிந்த இலங்கக்கோன் சுட்டிக்காட்டினார்.

இதுவரை காலமும் மின்சார சபை நட்டத்துடனேயே இயங் கியதாகவும் அவர் கூறினார். (அ)

# அரசுடன் இணையவுள்ள எதிர்க்கட்சி எம்.பிக்கள்?

## அவர்களில் சிலருக்கு அமைச்சுப் பதவி

கொழும்பு, டிசெ. 09

**எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும், குறிப்பிடத்தக்க சில பாராளுமன்ற உறுப்பினர்கள், எதிர்காலத்தில் அரசாங்கத்துடன் இணைய உள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தும், முக்கிய சில பாராளுமன்ற உறுப்பினர்களும், அவர்களில் அடங்குகின்றனர் என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மக்கள் எதிர்நோக்கியுள்ள அசௌகரியங்களில் இருந்து அவர்களை மீட்பதற்காக, இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

பாதீட்டு வாக்கெடுப்பின் பின்னர், அவர்கள் அரசாங்கத்துடன் இணைய உள்ளனர் எனவும் , இந்த வார இறுதியில், அவர்களில் சிலருக்கு அமைச்சுப் பதவிகள் கிடைக்க உள்ளதாகவும் அரசியல் வட்டாரத் தகவல்கள் மேலும் கூறின.

(அ)

# அமைச்சுப் பதவியை ஏற்பதற்கு நான் தயார்

## துமிந்த திஸாநாயக்க அறிவிப்பு



கொழும்பு, டிசெ. 09

அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்க தயாராகவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

'எப்போது அமைச்சராகப் போகின்றீர்கள்?' என்ற கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த வேலையைப் பாரம் கொடுத்தால், இதைச் சரியாகச் செய்வார் என்று ஜனாதிபதி நினைத்து என்னிடம் பொறுப்பை ஒப்படைத் தால் அதை நான் ஏற்றுக்கொள்வேன்.

அதற்காகத் தருகின்ற அமைச்சைப் பாரமேற்கமாட்டேன். என்னால் செய்ய முடியும் என்று நான் உணருகின்ற அமைச்சை மட்டுமே பாரமேற்பேன் - என்றார்.

(அ)

# காணி வங்கியொன்றை உருவாக்க ஆலோசனை

கொழும்பு, டிசெ. 09

நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான, அனைத்துக் காணிகள் தொடர்பான தகவல்களைத் திரட்டி, உடனடியாக காணி வங்கியொன்றை உருவாக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

நகர அபிவிருத்தி அதிகார சபையானது நாட்டின் முக்கிய நகரங்களில் அமைந்துள்ள, அதிக சந்தை பெறுமதியுடன் கூடிய சுமார் ஆயிரத்து எட்டு ஏக்கர் காணியையும், கட்டடங்களையும் கொண்டுள்ளது.

அதிக சந்தைப் பெறுமதியுடன் கூடிய, இதுவரை பாவனைக்கு உட்படுத்தப்படாத இவ்வாறான காணிகள், தேசியத் திட்டத்தின்படி அரச மற்றும் தனியார் துறைகளின் கூட்டுறவில் அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான சில காணிகள் பல்வேறு நபர்களினால் பலவந்தமாக கையகப்படுத்தப்பட்டுள்ளன.

காணி வங்கியொன்றை அமைத்து, காணிகளை உரிய முறையில் பட்டியலிடுவதன் மூலம், கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை மீள பொறுப்பேற்க முடியும்.

அதேநேரம், அந்த காணிகளை உரிய முறையில் பயன்படுத்துவதன் மூலம், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பை வழங்க முடியும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நம்பிக்கை வெளியிட்டார்.

(அ)





# நுவரெலியாவில் பலத்த காற்று; பல பகுதிகளுக்கு கடும் பாதிப்பு

கொழும்பு, டிசெ. 09

வானிலை மாற்றம் காரணமாக ஏற்பட்டுள்ள கடும் காற்றினால் நுவரெலியா மாவட்டம் வலப்பனை, உடபுஸல்லாவை , ருப்பஹா, கந்தப்பளை ஆகிய பல இடங்களில் பாரிய மரங்கள் முறிவு ஏற்பட்டு பாதிப்புக்களை உருவாக்கியுள்ளது.

நுவரெலியா மற்றும் வலப்பனை பிரதேசத்தில் நேற்று இரவு முதல் பலத்த காற்று வீசுகின்ற அதே வேளை கடுமையான குளிரும் ஏற்பட் டுள்ளது.

வலப்பனை பிரதேசத்தில் ருப்பஹா, மடுல்ல, உடபுஸல்லாவை, கல்கடப்பத்தனை, தெரிப்பே, ஹரஸ்பெத்த, இராகலை, புரூக்சைட், கந்தப்பளை ஆகிய பிரதேசங்களில் வீசும் கடும் காற்றினால் வீதியோரங்களில் பாரிய மரங்கள் சரிந்து போக்குவரத்து பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

இராகலை புரூக்சைட் பகுதியில் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த ஒட்டோ ஒன்றின் மீது மரம் வீழ்ந்து விபத்துக்கு உள்ளான நிலையில் அதில் பயணித்த ஒருவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளதாக இராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டோச் சாரதி பலத்த காயங்களுடன் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

வலப்பனை - நில்தண்டாஹின்ன ரூப்பஹா மற்றும் உடபுஸல்லாவை - மடுல்ல பிரதேச பிரதான வீதிகளில் பாரிய மரங்கள் வேருடன் சரிந்து மின் கம்பங்கள் முறிந்துள்ளன.

வீதி போக்குவரத்தை சீர் செய்ய அங்கு மரங்களை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதனால் இப்பிரதேசத்திற்கான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதுடன், வலப்பனை பிரதேசத்திற்கான மின்சாரம் தடைப்பட்டது.

மேலும் உடப்புஸ்ஸல்லாவ - மெத்திவரன நிவாச பகுதியில் வீடொன்றின் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வான் மீது மரம் ஒன்று முறிந்து வீழ்ந்து பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இராகலை உயர் நிலை பாடசாலையின் கட்டடம் ஒன்றின் மீது பாரிய மரம் வீழ்ந்து பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இக்கட்டடத்தில் பயிலும் உயர்தர மாணவர்கள் பாதுகாப்பாக வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் மாணவர்களுக்கு பாதிப் பில்லை என பாடசாலை அதிபர் தெரிவித்தார்.(அ)

# அந்நிய செலாவணி அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 09

நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதத்தில் இலங்கையின் அந்நிய செலாவணி கையிருப்பு 7.6 வீதமாக உயர்வடைந்துள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதம் அந்நிய செலாவணி கையிருப்பு 1610 மில்லியன் டொலர்களாக காணப்பட்டதாகவும், தற்போது 1732 மில்லியன் டொலர்களாக உயர்வடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையின் உத்தியோகபூர்வ ஒதுக்கச் சொத்துக்கள் 5.8 வீதமாக நவம்பர் மாதம் உயர்வடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதம் 1705 மில்லியன் டொலர்களாக காணப்பட்ட உத்தியோகபூர்வ ஒதுக்கச் சொத்துக்கள் 1804 மில்லியன் டொலர்களாக உயர்வடைந்துள்ளது என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

(அ)

# சிறுநீரக மோசடி தொடர்பான விசாரணைக்கு ஒத்துழைப்பு

கொழும்பு, டிசெ. 09

சிறுநீரக மோசடி தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு ஒத்து ழைப்பு வழங்கத் தயார் என, சிறுநீரக மோசடி குறித்து குற்றம் சுமத்தப்பட்டுள்ள, கொழும்பு-பொரளையில் உள்ள தனியார் வைத்தியசாலை அறிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றின் மூலம், குறித்த வைத்தியசாலை இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

குறித்த குற்றச்சாட்டு அடிப்படையற்றது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறுநீரகம் தொடர்பான சத்திர சிகிச்சைகளின்போது, சுகாதார அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகள் பின்பற்றப்படுவதாகவும் அந்த வைத்தியசாலையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே குறித்த சிறுநீரக மோசடி தொடர்பில் அண்மையில் கைது செய்யப்பட்ட தரகர், எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையில், குறித்த வைத்தியசாலையின் பிரதான வைத்தியர் உட்பட பணிப்பாளர்கள் ஆறு பேரும், நீதிமன்றின் அனுமதியின்றி, வெளிநாடு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த மோசடி வர்த்தகம் தொடர்பில், கொழும்பு குற்றவியல் பிரிவால் விசாரணை முன்னெடுக்கப்படுகிறது.

(அ)

# ஆங்கிலத்தில் இலங்கை சட்டக்கல்லூரி அனுமதி பரீட்சை; வர்த்தமானியை ரத்துச்செய்ய பாராளுமன்றில் யோசனை

கொழும்பு, டிசெ. 09

இலங்கையின் சட்டக் கல்லூரி அனுமதிப் பரீட்சைக்கு தனி ஆங்கில மொழியில் தோற்றவேண்டும் என்பதை ரத்துச்செய்யும் வகையில், அடுத்த வாரம் பாராளுமன்றில் வர்த்தமானி முன்வைக்கப்படவுள்ளது.

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ இதனை நேற்று முன்தினம் பாராளுமன்றில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகள் மற்றும் ஏனைய தரப்புக்கள் தொடர்ந்தும் விடுத்து வரும் கோரிக்கைக்கு இணங்க இதனை தாம் பாராளுமன்றில் முன்வைப்பதாக நீதியமைச்சர் குறிப்பிட்டார்.

சட்டக்கல்லூரிக்கான அனுமதிப் பரீட்சைக்கு ஆங்கில மொழியில் மாத்திரமே தோற்ற வேண்டும் என்ற வர்த்தமானி முன்னாள் நீதியமைச்சர் அலி சப்ரியால், வெளியிடப்பட்டது.

எனினும் இதனை மூன்று வருடங்களுக்கு பின்னர், நடைமுறைப்படுத்துமாறு தாம் விடுத்த கோரிக்கையை, நீதி கல்விச் சபை நிராகரித்துள்ளதாக நீதியமைச்சர் பாராளுமன்றில் கூறினார்.

எனவே, பல்வேறு தரப்பினர் மத்தியில் இருந்து தொடரும் கோரிக்கைகளை கருத்திற்கொண்டு, முன்னர் வெளியிடப்பட்ட வர்த்தமானியை பாராளுமன்றத்தின் ஊடாக,ரத்துச் செய்ய முடியும் என்றும் நீதியமைச்சர் குறிப்பிட்டார்.

(அ)

# பொருளாதாரப் பாதிப்புக்கு தீர்வு காண தேசிய கொள்கை வகுக்கப்படவேண்டும்

## சித்தார்த்தன் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 09

**பொருளாதார பாதிப்புக்கு தீர்வு காண வேண்டுமாயின் நாட்டு மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்த வகையில் தேசிய கொள்கை வகுக்கப்படவேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்ளைகள் அமைச்சு, முதலீட்டு மேம்பாடு ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.


அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாடு பொருளாதார ரீதியில் மோசமாக பாதிக்கப்பட்ட பின்னணியில் பாராளுமன்றத்தின் ஊடாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரச தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டபோது, பொருளாதார நெருக்கடிக்கு ஓரளவு தீர்வு எட்டப்பட்டு, வரிசை யுகம் கட்டம் கட்டமாக முடிவுக்கு கொண்டு வரப்படும் என மக்கள் எதிர்பார்த்தார்கள். மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறியுள்ளது.

நடைமுறையில் உள்ள பிரச்னைகளுக்கு தீர்வு காண பிரதமர் உட்பட அமைச்சரவை ஒத்துழைப்புடன் செயற்படுகிறது என்பதை குறிப்பிடவேண்டும்.

நிலையான பொருளாதார மீட்சிக்கான திட்டங்கள் முறையாக செயற்படுத்தப்படவில்லை. நாட்டில் பண வீக்கம் தற்போது குறைவடைந்துள்ளது. இருப்பினும் அத்தியாவசிய பொருட்களின் விலை



சடுதியாக உயர்வடைந்துள்ளது.

பூகோள ரீதியான காரணிகள் தற்போதைய பொருளாதார பாதிப்புக்கு ஒரு காரணம் என்று குறிப்பிடுவதை மறுக்க முடியாது.

தேசிய கொள்கை வகுத்தலில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களின் பங்களிப்பு கிடையாது. தேசிய கொள்கை வகுப்பில் தெற்கு அரசியல் கட்சிகள் முன்னிலையில் இருந்து செயற்படுகின்றன. வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் பிரதிநிதிகளின் ஆலோசனைகள் கோரப்படுவதில்லை.

வடக்கு மாகாணத்தில் ஒருகாலத்தில் மீன்பிடி மற்றும் உற்பத்தி கைத்தொழில் முன்னேற்றமடைந்திருந்தது. மொத்த மீன்பிடியில் மூன்றில் இரண்டு பங்கு நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு விநியோகிக்கப்பட்டது.

இந்த முன்னேற்றம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டது. இருப்பினும் யுத்தம் முடிவடைந்ததன் பின்னரும் இந்த துறைகள் மீள கட்டியெழுப்பப்படவில்லை. நாட்டின் உற்பத்தி துறைகள் முறையாக மறுசீரமைத்தால் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடையும்.

பொருளாதார பாதிப்புக்கு தீர்வு காணவேண்டுமாயின் நாட்டு மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்த வகையில் தேசிய கொள்கை வகுக்கப்படவேண்டும் - என்றார். (அ)

# 14 வயதுச் சிறுமி குழந்தை பிரசவம் 73 வயது முதியவர் விளக்கமறியலில்!

யாழ்ப்பாணம், டிசெ. 09

யாழ்ப்பாண பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குருநகர் பகுதியில் வசித்துவந்த 14 வயதுச் சிறுமி ஒருவர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் குழந்தை ஒன்றை பிரசவித்துள்ளார்.

இந்நிலையில் சிறுமியின் கர்ப்பத்திற்கு காரணம் என்ற சந்தேகத்தில் 73 வயதான முதியவர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட முதியவர் சிறுமியின் குடியிருப்பு பகுதியைச் சேர்ந்தவர் என்பதுடன், சிறுமியுடன் நெருங்கி பழகியவர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் யாழ்ப்பாண பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை யாழ். நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை, அவரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ)

# கடலட்டைப் பண்ணையாளர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த உத்தரவு!

கிளிநொச்சி, டிசெ. 09

கிராஞ்சியில் அமைக்கப்பட்டிருந்த சட்டவிரோத கடலட்டைப் பண்ணைக்கு எதிராக போராடிய மீனவர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு, நேற்று கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை, நீதிமன்றம் அவர்களைப் பிணையில் செல்வதற்கு அனுமதியளித்துள்ளதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளரும் சட்டத்தரணியுமான கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்தார்.

அத்துடன், சட்டவிரோத கடலட்டை பண்ணையாளர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிராஞ்சியில் அமைக்கப்பட்டிருக்கும் சட்டவிரோதமான கடல் அட்டைப் பண்ணைகளுக்கு எதிராக, ஜனநாயக வழியில் போராடிக் கொண்டிருக்கும் அப்பாவி மீனவக் குடும்பங்களுக்கு எதிராக பொலிஸார் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

வழக்கானது கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டது. இந்த மீனவர்கள் சார்பில் நான் ஆஜராகியிருந்தேன்.

குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக்கோவையின் 81ஆம் பிரிவின் கீழ் பொலிஸார் இந்த வழக்கை தாக்கல் செய்ய முடியாது என்றும், இதில் அப்பாவி மீனவர்களின் வாழ்வாதாரமும் ஜீவனோபாயமும் பாதிக்கப்பட்டிருக்கின்றபடியால் எந்தவிதமான அனுமதியும் பெறாது அமைக்கப்பட்டிருக்கும் கடலட்டைப் பண்ணைகள் அகற்றப்படவேண்டும் என்று ஜனநாயக வழியில் போராடுகின்றார்கள் என்றும், ஜனநாயக ரீதியில் முன்னெடுக்கப்படுகின்ற போராட்டங்களை 81ஆவது பிரிவின் கீழ் வழக்கு தாக்கல் செய்து நீதிமன்றத்தில் கொண்டுவர முடியாது என்றும் சுட்டிக்காட்டி வாதாடியிருந்தோம்.

அந்த அடிப்படையில் சந்தேக நபர்களாக முற்படுத்தப்பட்ட மீனவர்களை பிணையில் விடுவித்த நீதிமன்றம், அடுத்த தவணை சட்டவிரோ கடலட்டை பண்ணையாளர் களை நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு கட்டளையிட்டிருந்தது - என்றார். (அ)

# நிபந்தனைகளுடன் நிறைவேறியது கசினோ ஒழுங்குப்படுத்தல் சட்டம்



கொழும்பு, டிசெ. 09

கசினோ வர்த்தக ஒழுங்குப்படுத்தல் சட்டம் கடுமையான நிபந்தனைகளின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

2023ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி நாட்டில் கசினோக்களை ஒழுங்குபடுத்தும் வகையில், கசினோ ஒழுங்குப்படுத்தல் முகவர் நிலையம் ஒன்று ஸ்தாபிக்கப்படும் என்ற வாக்குறுதியின் பேரில் அரசாங்கத்தின் நலன்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக ஹர்ஷ டி சில்வா மேலும் கூறினார். (அ)

# ஊவதென்ன சுமண தேரர் கைது!

கொழும்பு, டிசெ. 09

தேங்காய் எண்ணெயைப் பெற்றுக்கொண்டு, செலுத்த வேண்டிய கோடிக்கணக்கான பணத்தை செல்லுபடியற்ற காசோலைகளின் ஊடாக வழங்கி மோசடி செய்த குற்றச்சாட்டில் ஊவதென்ன சுமண தேரரை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்தனர்.

தெமட்டகொட பிரதேசத்தில் வசிக்கும் வர்த்தகர் ஒருவர் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சந்தேகத்தின் பேரில் இவரைக் கைது செய்துள்ளனர்.

அதற்கமைய, சந்தேகநபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ)

# மின் கட்டணம் உயர்த்தப்படாவிட்டால் பணத்தை அச்சடிக்கவேண்டி ஏற்படும்!

## ஜனாதிபதி ரணில் சுட்டிக்காட்டு



கொழும்பு, டிசெ. 09

மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கவேண்டும். இல்லை என்றால் பணத்தை அச்சடிக்க வேண்டும் அல்லது வற் வரியை அதிகரிக்கவேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இந்த விடயத்தை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒகஸ்ட் மாதம் மின் கட்டணத்தை உயர்த்தினோம். அது போதாது. 151 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. 2013 முதல் நமது மொத்த இழப்பு 300 பில்லியன். 300 பில்லியன் வருமானத்தை ஏற்படுத்த வேண்டும்.

அடுத்த ஆண்டு வறட்சி ஏற்பட்டால் 420 பில்லியன் ரூபா தேவை. மழை பெய்தால் 352 பில்லியன் தேவைப்படும். அதிக மழை பெய்தால் 295 பில்லியன் ரூபாவே தேவைப்படும்.

அரசாங்கத்திற்கு வருமானம் இல்லை. பணத்தை அச்சிடமுடியுமா? அப்படி பணத்தை அச்சிட்டால் ரூபாய் மதிப்பு குறைகிறது. எனவே வெட் வரியை அதிகரிப்போம்.

வற் வரியை அதிகரித்த பிறகு, அது ஒரு பிரச்னையாக மாறும்.

மூன்றாவதாக கட்டணத்தை உயர்த்தவேண்டும் இல்லையெனில் மின்சாரம் தடைப்படலாம். எனக்கு அது பிடிக்கவில்லை. இதை நாம் தயக்கத்துடன் செய்ய வேண்டும். மக்கள் விரும்பாத முடிவுகளை எடுக்க வேண்டும். அதனால் எதிர்காலம் சிறப்பாக இருக்கும்.

கடந்த 2013ஆம் ஆண்டு முதல் மின் கட்டணம் உயர்த்தப்படவில்லை. அனைவரும் இதனை பொறுப்பேற்க வேண்டும் - என்றார். (அ)

# இஸ்ரேலின் கடல், நில, முற்றுகையால் பட்டினியை எதிர் நோக்கும் பலஸ்தீனம்:

## காசாவில் வறுமை விகிதம் பெருமளவில் உயர்வு !

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

பாலஸ்தீனத்தின் காசாவில் கடந்த வருடத்தில் மட்டும் வறுமை விகிதம் 64 சதவீதமாக உயர்ந்துள்ளதாக பாலஸ்தீனிய சர்வதேச உறவுகளுக்கான கவுன்சில் தெரிவித்துள்ளது.



பாலஸ்தீனத்தில் நீடித்த மோதல்கள், பொருளாதார தேக்கநிலை இன்னமும் தொடர்கிறது. அதேவேளை தடைசெய்யப்பட்ட வர்த்தகம் மற்றும் வளங்களுக்கான அணுகல், அதிக வேலையின்மை மற்றும் வறுமை விகிதங்களுடன் இணைந்து, பட்டினியும் அதிகரித்துள்ளது.

உணவுப் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட ஊட்டச்சத்து ஆகியவற்றில் நிலையான வளர்ச்சியை அடைவதற்கு கடுமையான சவால்கள் பாலஸ்தீனத்தில் தொடர்கிறது.

கடந்த 16 ஆண்டுகளாக இஸ்ரேலின் கடலோரப் பகுதியில் விதிக்கப்பட்ட முற்றுகையாலும், இந்த பகுதியில் வறுமை விகிதம் 64 சதவீதமாக உயர்ந்துள்ளதாக பாலஸ்தீனிய சர்வதேச உறவுகளுக்கான கவுன்சில் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கோவிட் - 19 தொற்று வெடிப்பதற்கு முன்பாக கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு மக்கள் - 32.7 சதவீதம் அல்லது 1.6 மில்லியன் மக்கள் - சத்தான உணவை பெற முடியவில்லை. அத்துடன் உணவுப் பற்றாக்குறை பெண்களிடையே அதிகமாக உள்ளது. 33.7 சதவிகிதம் பெண்களை வழிநடத்தும் குடும்பங்கள் உணவுப் பற்றாக்குறையாலும், பாதுகாப்பற்ற நிலையாலும் குறிப்பாக காசா பகுதியில் இது 64 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

பாலஸ்தீனிய சர்வதேச கவுன்சில் தகவலின்படி 2007-ம் ஆண்டு ஹமாஸ் அரசு கடலோரப் பகுதியின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றியதை தொடர்ந்து, 2 மில்லியனுக்கும் அதிகமான பாலஸ்தீனியர்கள் வசிக்கும் காசா பகுதி இஸ்ரேலிய முற்றுகையின் கீழ் உள்ளது. ஹமாஸ் ஆளுகைக்கு உள்பட்ட கடலோரப் பகுதியானது 360 சதுர கி.மீ நிலப்பரப்பைக் கொண்டுள்ளது.

**தொடரும் யுத்த விளைவு**

மேலும் இது உலகின் மிகவும் அதிக மக்கள் தொகை கொண்ட பகுதிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இங்கு வசிக்கும் 80 சதவீத மக்கள் மனிதாபிமான உதவி மற்றும் சர்வதேச அமைப்புகளின் மானியங்களை நம்பியுள்ளனர். காசா பகுதியில் 16 ஆண்டுகளாக இஸ்ரேல் விதித்துள்ள முற்றுகையை முடிவுக்குக் கொண்டுவர அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும் என்று கவுன்சிலின் தலைவர் கூறினார்.

தொடரும் யுத்தத்தால் கடுமையான உணவுப் பாதுகாப்பற்று பாலஸ்தீனியர்கள் கணிசமான நுகர்வு இடைவெளியை அனுபவித்து வருகின்றனர். உணவு, வீடு மற்றும் உடை உள்ளிட்ட அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வழியின்றி உள்ளனர்.

காசாவில் உள்ள மனிதாபிமான நிலைமைகள் - வறுமை மற்றும் உணவுப் பற்றாக்குறை ஆகியவை முறையே 53 சதவிகிதம் முதல் 64.4 சதவிகித மக்கள் தொகையைப் பாதிக்கின்றன என தரவுகள் தெரிவிக்கின்றன.

இது ஆபத்தான மேலும் அனைத்து உற்பத்தித் துறைகள், அடிப்படை சமூக சேவைகள் மற்றும் உள்கட்டமைப்புகளின் சரிவைப் பின்பற்றுகிறது.

16 ஆண்டுகால இஸ்ரேலின் கடல், நிலம் மற்றும் வான்வழி முற்றுகையின் ஒட்டுமொத்த தாக்கத்தால் காசாவின் சமூகப் பொருளாதாரத் தளம் தள்ளாடுகிறது. கோவிட் 19 உடன் பாதிப்புகள் மேலும் அதிகரித்துள்ளன.



உலக உணவுத் திட்டம்:

உலக உணவுத் திட்டம் (றுகீ) 1991 முதல் பாலஸ்தீனத்தில் உள்ளது, இது மிகவும் பாதிக்கப்படக்கூடிய அகதிகள், பொது மக்களுக்கு உணவு உதவி மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்குகிறது. அத்துடன் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் உட்பட வறுமையை எதிர்த்துப் போராடுவதற்கான அரசாங்க முயற்சிகளை உலக உணவுத் திட்டம் வழங்குகிறது.

உலக உணவுத் திட்டம் ஆனது காசா பகுதி மற்றும் மேற்குக் கரையின் தெற்குப் பகுதிகள் உட்பட, உணவுப் பற்றாக்குறை அதிகம் உள்ள பகுதிகளில் கவனம் செலுத்துகிறது. சமீபத்திய அதிகரித்த கோவிட்-19 இன் தற்போதைய விளைவு காரணமாக உலக உணவுத் திட்டம் மேற்குக் கரையின் முழுப் பகுதிகளுக்கும் தனது



உதவியை விரிவுபடுத்தியுள்ளது.

எத்தகைய சர்வதேச அழுத்தம் இருப்பினும், இஸ்ரேலால் கைப்பற்றபட்ட பாலஸ்தீனம் இன்றுவரை தொடரும் சியோனிச ஆதிக்கத்தை எந்த ஒரு நாடும் தட்டிக் கேட்கவில்லை என்பதே நிதர்சனமான உண்மை.



**அமெரிக்காவின் கைப்பிள்ளை:**

இஸ்ரேல் அரசுக்கு 1949-1996 ஆம் ஆண்டு வரை அமெரிக்கா வழங்கிய உதவித்தொகை 62.5 பில்லியன் ஆகும். அதாவது ஒரு இஸ்ரேலிய யூத பிரஜைக்கு செலவழித்த தொகை 10775 டொலர்கள்.

அதே நேரத்தில் ஆப்ரிக்க மற்றும் தென் அமெரிக்கா மக்களுக்கு செலவிட்ட தொகை தனி நபருக்கு வெறும் 59 டொலர் மட்டுமே. இது போக ஒவ்வொரு வருடமும் வறுமையில் வாடும் தேசங்களுக்கு அமெரிக்கா வழங்கும் உதவித்தொகையில் மூன்றில் இரண்டு பங்கு தொகை இஸ்ரேலிற்கு அமேரிக்கா வழங்குகிறது.

இது ஒன்றும் அவர்களின் வயிற்றுப் பசியை போக்குவதற்கு இல்லை. மாறாக ஆயுதங்களை குவிக்கவும் பூர்வீக பலஸ்தீன மக்களை அடக்கவே பயன்படுகிறது என்பதை மறுக்க முடியாது.

பாலஸ்தீனின் நிலங்களை ஆக்கிரமித்து பாலஸ்தீனின் பூர்வீக குடிமக்களை தினம் தினம் கொன்றும் அவர்களை அகதிகள் முகாமிற்கு அனுப்பியும் வருகிறது. இஸ்ரேல் ஒன்றும் தனது சொந்த பணத்தில் இது போன்ற இனப்படுகொலைகளை அரங்கேற்றி வரவில்லை.

மாறாக அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பணத்தில் தான் இவ்வளவு கொடுமைகளையும் செய்து வருகிறது. இதிலிருந்தே ஐரோப்பிய மற்றும் அமெரிக்காவின் மனித உரிமைகள் மற்றும் சமாதான, ஜனநாயகம் எல்லாம் வெறும் எழுத்தளவில் தான் என்பது புரிகிறது.

நெல்சன் மண்டேலாவின் தீர்க்கதரிசனம்:

பாலஸ்தீனப் பிரச்சினையை நம் காலத்தின் மாபெரும் தார்மீகப் பிரச்சினை என்றார் நெல்சன் மண்டேலா. பாலஸ்தீன மக்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதியை, அவர்களின் துயரத்தை இதைவிடச் சுருக்கமாக அதே நேரத்தில் மனத்தைத் தைக்கும் விதமாக ஒருவர் கூற முடியாது.

இரண்டாம் உலகப்போருக்கு பின் இரண்டு சம்பவங்கள் உலகை உலுக்கிக் கொண்டிருந் தது. இதில் ஒன்றான தென்னாப்பிரிக்க நிறவெறி ஆட்சி நீண்ட நெடிய போராட் டத்திற்குப் பின்னர் 1994இல் முடிவுக்குவந்தது.


ஆனால் 1940களில் தொடங்கிய பாலஸ்தீன மக்களின் துயரம் இன்றளவும் தொடர்கிறது. பலஸ்தீன சுதந்திர போராட்டமும் இன்றுவரை தொடர்ந்து கொண்டுதான் உள்ளது என பாலஸ்தீனம் பற்றிய நெல்சன் மண்டேலாவின் கருத்தை எவராலும் மறுக்க முடியாது.




# வ.ந.கிரிதரனின் ‘அமெரிக்கா’, ‘குடிவரவாளன்’ நாவல்கள் - ஒரு நோக்கு!

**எழுத்தாளர் ரஞ்ஜனி சுப்ரமணியம் சிறந்த கலை,இலக்கியத்திறனாய்வாளராகவும் அறியப்படுபவர். அவர் எழுத்தாளர் வ.ந.கிரிதரனின் ‘அமெரிக்கா’ மற்றும் ‘குடிவரவாளன்’ நாவல்களைப்பற்றி எழுதிய திறனாய்வுக் கட்டுரை இது**

ரஞ்ஜனி சுப்ரமணியம்




ஓர் அகதியின் வாழ்வும் உணர்வுகளும் அவனாக வாழ்ந்தாலன்றி புரிந்து கொள்வது சிரமமானது. கடந்த சில தசாப்தங்களில் முன்னேற்றமடைந்த மேற்கு நாடுகளில் தஞ்சம் கோரிய எம்மவர்களின் பயண மற்றும் வாழ்வியல் அவலங்கள், தாயகத்தில் இருக்கும் உறவுகளால் சரியான விதத்தில் மனம் கொள்ளப்பட்டுள்ளதா என்ற கேள்விக்கான பதில் இன்றளவும் “இல்லை“ என்பதாகவே அமையும். இத்தகைய ஒரு சூழ்நிலையில் தனது புலம் பெயர் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு தரமான படைப்பாளி தன்னிலை ஆறுதலை மட்டுமல்ல, தனது அனுபவப் பதிவுகளின் மூலம் அகதி வாழ்வின் கொடூர மான மறுபக்கத்தை வாசகருக்காகவும் வரலாற்றுக்காகவும் விட்டுச் செல்கிறான். வ.ந. கிரிதரன் அவர்களின் அமெரிக்கா (முதற்பதிப்பு 1996 இரண்டாம் பதிப்பு 2019), குடிவரவாளன் ( 2015) ஆகிய இரு நாவல்களும் இவ்விடயத்தில் முக்கியத்துவம் பெறுகின்றன.

இவ்விரு நாவல்களின் ஆசிரியரான வ.ந.கிரிதரன் அவர்களது எழுத்தின் இயல்புகளை, படைப்புகளினூடாக வெளிப்படும் பொதுப்பண்புகளால் இனங்காண முடியும். தாய் மண்ணின் சாயம் போகாத நினைவுகளுடன் வாழ்பவர் வரலாற்றை ஆராய்ந்து அறிபவர் கவித்துவமான சிந்தனைகளைஉடைய இயற்கையின் ரசனையாளர் வாழ்வியலை தத்துவரீதியாகவும் பிரபஞ்ச சார்புத் தன்மையுடன் அர்த்தப்படுத்துபவர் சஞ்சலமுற்ற நேரங்களில் பாரதியின் கவிதைகளால் புத்துயிர் பெறுபவர் தன்னிமிர்வும் பன்முக வியாபகமும் கொண்ட சிந்தனையாளர் வித்தியாசமான நடையுடன் கூடிய எழுத்தாளர்.இவரது எழுத்தின் போக்கினை உணர்ந்து நாவலுக்குள் உள்நுளையும் ஒருவரால் அதிக ரசனையும் புரிதலும் கொள்ள முடியும் என்பது உண்மை.

கனடாவிற்கான தன் பயணப் பாதையில் இடைமாறலுக்காக, சட்டபூர்வமாக அமெரிக்காவின் பொஸ்டன் விமான நிலையத்திற்கு வரும் ஒருவன் சந்தர்ப்ப சூழ்நிலையால் அகதி அந்தஸ்து கோர வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறான். இச்சந்தர்ப்பத்தில், ஜனநாயகத்தின் தொட்டில் என வர்ணிக்கப்படும் உலகின் மாபெரும் வல்லரசொன்றின் கருணையற்ற இருண்ட பக்கங்களையும் மனோரீதியான சித்திர வதைகளையும் விலாவாரியாக வெளிச்சமிட்டுக் காட்டுவதே படைப்பாளியின் நோக்கம். அதில் பெருவெற்றியும் பெற்றுள்ளார்.

அக்கரைப் பச்சையாக மாயத் தோற்றம் தரும் விடயங்கள் நிஜத்தில் அவ்வாறல்ல என்ற புரிதல் இவ்விரு நாவல்களையும் வாசிக்கும் போது தோன்றியது. இலங்கை போன்ற நாடுகளில் மனித உரிமை மீறல்களும், மூடிமறைப்புகளும், சட்ட மீறல்களும் சகஜமானவை என்பது பொதுவான அபிப்பிராயம். வியப்பேதும் இல்லை. ஆனால் “உலகின் பொலிஸ்காரன்“ என்ற நிலையைக் கொண்டிருக்கும் அமெரிக்காவிலும் இவ்வாறான நிகழ்வுகள் தவறான புரிதல்களினால் இடம்பெறுகின்றன என்பது வியப்புக்குரியது.

எண்பத்து மூன்று இனக்கலவரத்தின் பின் ஆரம்பமாகும் இவ்விரு நாவல்களும் பிரதான கதாபாத்திரமான இளங்கோ என்ற இளைஞனின் பார்வையில் கூறப்பட்டுள்ளன. படித்தவர்களும் உயர் பதவியில் இருந்தவர்களும் உயிர்ப்பாதுகாப்பு கருதி புலம் பெயரத் துணியும் ஒரு சூழ்நிலை. பொதுநலவாய நாடுகளில் ஒன்றான இலங்கையில் இருந்து கனடாவிற்குச் செல்வதற்கு விசா எடுக்கத் தேவையில்லை என்ற அனுகூலத்தைப் பாவித்து, பாரிஸ் நகருக்கும் அங்கிருந்து பொஸ்டன் ஊடாக கனடாவின் மான்ரியாலுக்கும் செல்ல உத்தேசித்திருக்கும் இளங்கோ உட்பட்ட ஐவரை, பொஸ்டனில் இருந்து கனடாவின் மன்றியேல் நகருக்கு ஏற்றிச் செல்ல நிர்வாகச் சிக்கல்கள் காரணமாக டெல்டா விமான நிர்வாகம் மறுத்து விடுகிறது. இதனால் மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப் படுவதைத் தடுப்பதற்காக பொஸ்டனில் அகதி அந்தஸ்து கோரும் நிலைக்கு ஐவரும் தள்ளப்படுகின்றனர். பொஸ்டனில் இருந்து நியூயோர்க்குக்கு கொண்டு செல்லப்பட்டு சிறைக் கூடத்தில் தடுப்புக் கைதிகள் ஆக்கப்படுகின்றனர்.

இவர்களுக்கு பொஸ்டன் விமானநிலையத்தில் ட்ரான்சிட் விசா வழங்கப்பட்டிருந்த நிலையில், குறிப்பிட்ட சட்டபூர்வ கால எல்லைக்குள் அகதி அந்தஸ்து கோரியிருந்தாலும், தவறுதலாக சட்டவிரோத குடிவரவாளர்களாகக் கணிக்கப்பட்டு சிறை வைக்கப் படுகின்றனர் என்பது துரதிர்ஷ்டவசமானது. யானைக்கும் அடி சறுக்கும். இறுதியில் கிட்டத்தட்ட மூன்று மாத கால தாமதத்தின் பின் அமெரிக்க குடிவரவுத் திணைக்களத்தின் தவறு உணரப்பட்டு அடுத்தநாள் தடுப்புக்காவலில் இருந்து பிணையில் விடுவிக்கப் படும் நிலையில் உள்ளனர்.

‘அமெரிக்கா’ நாவல் இப்பகுதியுடன் நிறைவு பெறுகிறது.

நாடு விட்டு நாடு வந்து அனாதரவான சூழ்நிலையில் சிறையில் அடைக்கப்படும் அவர்களது மன உணர்வுகளும், உறவுகளின் நிலையை எண்ணிய ஆற்றாமையும், சந்திக்கும் பல்நாட்டு கைதிகளுடனான அனுபவங்களும், நிராகரிப்புகளும் உதவும் கரங்களும் ஆறுதல் தேறுதல்களும் பெறுமதிமிக்க வாழ்க்கை அனுபவங்களை இவர்களுக்குத் தருகின்றன. உறவுகள் பிரிக்கப்பட்டு உணர்வுகள் அழிக்கப்பட்ட அகதிகளை, தனிமைப்படுத்தல் என்னும் மன அழுத்தத்திற் குள் தள்ளுவது, அவர்கள் மீளவும் தமது சொந்த நாட்டுக்கு திரும்பும் விருப்பினை தாமாக வெளிப்படுத்துவதற்காகவே என்ற அரசின் தந்திரமான நடவடிக்கை தெளிவாக உணர்த்தப் பட்டுள்ளது.

சிறுவயதில் தான் விரும்பும் நாடாக அமெரிக்காவை மிக உயர்ந்த இடத்தில் வைத்திருந்த இளங்கோ, இந்த அனுபவத்தின் பின் ஒருபோதும் அவ்வாறு நினைக்க மாட்டான் என்ற வரிகளின் பின்னிருக்கும் வெறுப்புணர்வு சார்ந்த ஆதங்கம் மனம் கொள்ளப்பட வேண்டியது. அது போலவே எண்பத்து மூன்று இனக்கலவரத்தின் உளவியல் சமூக மாற்றமாக இளைஞர்கள் இயக்கத்தில் சேர்கிறார்கள் என்பதைக் கேள்வியுற்று, கோழைகள் போல உயிர் தப்ப வெளிநாட்டுக்கு ஓடி வந்த இளங்கோ போன்றவர்கள் தம்மை நினைத்து குற்ற உணர்வு கொள்வதும் நுணுக்கமான உணர்வுநிலை. இன்று புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் அன்றைய இளைஞர்கள் பலருக்கும் இது பொதுவான உணர்வாகவே இருக்கும்.

வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் இலங்கை அரசின் இனத்துவேச நடவடிக்கைகள் பற்றி அங்குள்ள அரசுக்கும் மக்களுக்கும் அறிதலை ஏற்படுத்த வேண்டும் என்ற உணர்தல் கதைமாந்தரூடாக வெளிப்படுத்தப்பட்டு இருப்பது, இவ்வாறாக புலம்பெயர்ந்த பலரின் உள்ளக் குறுகுறுப்பு மற்றும் குற்ற உணர்வு காரணமாகவே என்ற நியாயமான மனநிலையும் கூறப்பட்டுள்ளது .நாவல் முதலில் எழுதப்பட்ட தொண்ணூறுகளின் காலகட்டத்தில் மட்டுமல்ல இன்றும் இத்தகைய தூண்டல்கள் அவசியமானதாகவே இருக்கின்றன.

அமெரிக்கா நாவலின் தொடர்ச்சியாக “குடிவரவாளன்” அமைந்திருக்கிறது. நாளை விடுதலை எனும் நிம்மதியுடன் எண்பத்து மூன்று இனக்கலவர நாட்களின் கொடிய நிகழ்வுகளை “சலனப்படமாகக்” காணும் இளங்கோவின் அக்காலகட்டம் பற்றிய நினைவலைகள்,வாசகரை மீண்டும் அந்த அவலநாட்களுக்குள் இழுத்துச் சென்று பதற வைக்கின்றன. இனக்கலவரத்தில் நிர்வாணமாக்கப்பட்டு எரியூட்டப்படும் தமிழர்களும் வெலிக்கடை சிறைச்சாலைப் படுகொலைகளும் இளங்கோவின் அனுபவப் பதிவாக மீண்டும் மனதை ரணமாக்குகின்றன. படைப்பாளி கூறியிருப்பது போல இது ஆவணப் பதிவாகவும் அமைகிறது. சிறுபான்மையான தமிழர்களைப் போலவே பெரும்பான்மையினரான சிங்கள மக்களுக்கும், ஒரு சிறுபான்மை உணர்வும் அதன் காரணமான அச்ச உணர்வும் உண்டு என்பதும் இவ்விடத்தில் குறிப்பிடப் படுகிறது. காரணம் எமக்கு அருகிலிருக்கும் தமிழக மக்கள். சிங்கள மக்களின் பாதுகாப்பற்ற உணர்வும் புரிந்து கொள்ளப்பட வேண்டிய நியாயங்களைக் கொண்டுள்ளது.

அகதிகளுக்கான சட்டபூர்வமான ஆவணங்கள் ஏதுமற்ற நிலையில் “பிணையில் விடுவிக்கும் பத்திரம்“ ஒன்றை மட்டுமே சட்டபூர்வ ஆவணமாகக் கொண்டு சிறையில் இருந்து வெளிவரும் இவர்கள், தொழில் ஒன்றைத் தேடி தம்மை நிலை நிறுத்துவதற்கும், உயிர் வாழ்தலுக்கும் தப்பிப் பிழைத்தலுக்குமான பெரும் போராட்டத்தினை இந்நாவல் கூறுகின்றது. தமது படிப்புக்கும் தகுதிக்கும் ஏற்ற வேலை ஒன்றைத் தேடுவதற்கு சமூகக் காப்புறுதி இலக்கம் முக்கியமென்பதை உணர்ந்து அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். நியுயார்க் சட்டத்தரணி அனிஸ்மானின் உதவியினை நாடும் இவர்கள் அவராலும் ஏமாற்றத்துக்கு உள்ளாகின்றனர். இக்கால கட்டத்தில் தமது கல்வித் தகைமைகளுக்கு சற்றும் பொருத்தமற்ற உடல் உழைப்பைக் கோரும் பல தரப்பட்ட கீழ் மட்ட வேலைகளை குறைந்த சம்பளத்தில் செய்கின்றனர். விடிவு கிடைக்கும் என்ற மன நம்பிக்கையை உறுதியாய் பற்றி இருக்கின்றனர். ஆனால் ஏமாற்றங்கள் தொடர்கின்றன. தமது மனித உரிமைகள் மீறப்பட்டது நிர்வாகத்தின் தவறென நட்ட ஈடு கோரும்படி கூறிய சட்டத்தரணி, பின்னர் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் அழுத்தம் காரணமாக பின்வாங்குகிறார். இதன் பின்புலத்தில் பணம் கைமாறலும் உள்ளதா என இவர்கள் சந்தேகிக்கும் இடம் பேரதிர்ச்சி அடையச் செய்கிறது. இவர்களின் வழக்கு வெற்றி பெற்றால் அது ஏனைய அகதிகளுக்கும் உதாரணமாகி விடுமோ என்ற வெளிப்பாடு “மனித உரிமைகளின் காவலன்“ என்ற அமெரிக்க நாட்டின் மீது பெரும் சஞ்சல உணர்வினை ஏற்படுத்துகிறது.

ஒரு வருடகால அலைக்கழிவின் பின் இளங்கோ முன்பு திட்டமிட்டபடி அகதிகள் விடயத்தில் நெகிழ்ச்சியான போக்குடைய கனடா செல்வதற்கு முடிவு செய்கிறான். சட்டவிரோதமாக கனடாவுக்குள் நுழைய முற்படும் அவனது திட்டம் ஆபத்துக்கள் நிறைந்தது எனினும் தன்னம்பிக்கையுடன் தனது பயணத்தை தொடங்குகின்றான். முதல் நாள் இரவு தனது குறிப்பேட்டில் தனது மனதை உறுத்தித் தாக்கிய பல விடயங்களைப் பதிகிறான். (பக்கம் 199 தொடக்கம் 202 ) நாவலில் அனைவரும் அவசியம் வாசிக்க வேண்டிய அதிமுக்கிய பக்கங்களாக இவற்றைக் கொள்ளலாம்.

ஏனெனில், சில படைப்புகள் இறுதியில் சொல்லப்படும் வசனங்களால் அல்லது கேட்கப்படும் கேள்விகளினால் தமது உச்சக்கட்ட வெளிப்பாட்டினைத் தருகின்றன. அமெரிக்கா, குடிவரவாளன் ஆகிய இரு படைப்புகளும் இவ்வகையைச் சார்ந்தவை. சர்வதேசத்தின் பொலிஸ்காரனாக மனித உரிமைகளுக்குப் பெயர் போன ஒரு நாட்டின் மீது, பாதிக்கப்பட்ட ஒரு அகதியினால் முன்வைக்கப்படும் கேள்விகள் அதன் நியாயத்தன்மை காரணமாக படைப்புக்கு மிகுந்த பெறுமதியையும் புதிய பரிமாணத்தையும் தருகின்றன. பலரின் கனவுலகமாகத் திகழும் அமெரிக்காவின் இருண்ட பக்கங்களையும், ஆரோக்கியமான பக்கங்களையும் இளங்கோ தன் மன வெளிப்பாடுகளாகப் பதிவு செய்கிறான். அத்துடன் அகதிகளுக்கு வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாக ஏமாற்றும் முகவர்களும், அகதிகளின் விடயத்தில் பராமுகமாக நடக்கும் சில புலம் பெயர் அமைப்புகளும் இளங்கோவின் கணிப்பிலிருந்து தப்பவில்லை. இளங்கோவினால் முன்வைக்கப்படும் மூன்று கேள்விகள் அதிமுக்கியமானவை.

வாழ்வதற்கு வழிகள் பல கொண்டிருக்கும் ஒரு நாட்டில் சுகித்திருக்கும் மக்கள் ஒருபுறம் உரிமைகள் மறுக்கப்பட்ட மக்கள் கூட்டம் மறுபுறம். தமது நிலை கருதி குறைந்த வேதனத்தில் கடின உழைப்பைத் தரும் மில்லியன் கணக்கான சட்டவிரோத குடிகளின் உழைப்பில் வசதி படைத்த மக்கள் சுகித்து வாழும் போக்கு எப்பேர்ப்பட்ட அநீதி?

ஒருகாலத்தில் செல்வம் நாடி இந்த மண்ணுக்கு சட்டவிரோதமாகப் படையெடுத்து, இம்மண்ணின் பூர்வகுடிகளை நிர்மூலமாக்கிய ஐரோப்பியரின் வழித்தோன்றல்களான இன்றைய பெரும்பான்மை நவ அமெரிக்க மக்கள், இன்று பல்வேறு அரசியல் பொருளாதார காரணங்களுக்காக இங்கு படையெடுக்கும் மக்களை சட்டவிரோத குடிகளாக்கி சிறுமைப் படுத்துவதற்கு தார்மீக உரிமை இருக்கிறதா?

தமது தேசிய பாதுகாப்பு நலன்களுக்காக உலகெங்கும் அரசியல் இராணுவ ரீதிகளில் புகுந்து விளையாடியும் , வலிமை குன்றிய நாடுகள் மீது ஆதிக்க மனப்பான்மை கொண்டு அமெரிக்கா தொடுக்கும் ஈவிரக்கமற்ற போர்களினாலும் பாதிக்கப்பட்ட மக்கள் இங்கு அகதிகளாக வந்தால் ஏற்பதில் தயக்கமென்ன?

இவ்வாறாக தன் மன ஆதங்கங்களை இளங்கோவினூடாக வெளிப்படுத்தும் படைப்பாளி, அமெரிக்காவின் ஆற்றலும் நம்பிக்கையும் மிகுந்த ஆரோக்கியமான பக்கங்களையும் சுட்டிக் காட்டத் தவறவில்லை. அவை பலராலும் வெளிப்படுத்தப்பட்டு உள்ளன.துரதிர்ஷ்டவசமாக அகதிகளில் இந்நிலை கண்டவர்கள் ஒரு பகுதி எனில் அமெரிக்கா பலரின் கனவு தேசமென்பதும் சென்றடைந்த அகதிகளில் பலர் இன்று மேனிலையில் இருக்கிறார்கள் என்பதும் உண்மை.

நாவலில் மனதில் நிலைக்கும் மனித நேயம் கொண்ட பாத்திரப் படைப்புகளாக இடர் மிகுந்த நாட்களில் வேலை வாய்பினைத் தந்த ஹரிபாபு, வாடகை வீட்டு உரிமையாளர்கள் அஜித் பத்மா தம்பதி, தடுப்புக் காவலில் இருந்து இவர்கள் விடுதலை பெற முயற்சிகளை மேற்கொள்ளும் கிறிஸ்தவ பாதிரியார் ஏபிரகாம் , வேடிக்கையாகப் பேசினாலும் “அமெரிக்கா உங்களை நிச்சயம் வாழவைக்கும்“ என நம்பிக்கை அளித்து ஆலோசனைகள் கூறும் குடிவரவுத் திணைக்கள அதிகாரி டிம் லாங்கின்,உருக்கமான ஒருதலைக் காதலுடன் ஏங்கும் கோவ்ஷ், “பாப் பாடகி சிந்தி லோப்பரின்“ உருவச்சாயல் கொண்ட ரயில் சிநேகிதி ஆகியோரைக் குறிப்பிடலாம். அதே சமயம் அகதிகளுக்கு உதவுபவர்கள் போல பொய்முகம் காட்டி ஏமாற்றும் ஸ்பானிஸ்காரன் பப்லோ, சட்டத்தரணி அனிஸ்மான் போன்றவர்களும் வெறுப்புடன் நினைவு கூரப்பட வேண்டிய வர்களே.

உலகெங்கும் போர்களும் அவை சார்ந்த பிரச்சனைகளும், ஆதிக்க நாடுகளினால் தமது நலன் கருதி உருவாக்கப் படுகின்றன என்பதும் அகதிகள் தாமாக உருவாவதில்லை, ஆதிக்க சக்திகளினால் உருவாக்கப் படுகிறார்கள் என்பதும், தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியே என்பதும் வாசிப்பின் அனுபவமாகப் பெறப்படுகிறது.

கனடாவிற்கான பயணத்தை ஆரம்பித்திருக்கும் இளங்கோவிற்கு அவன் மனம் விரும்பும் பாரதி பாடலொன்றின் சில வரிகளால் வாழ்த்துவதே சிறப்பானதாக இருக்கும்.

“இன்று புதிதாய் பிறந்தோமென்று நீவி
எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு
தின்று விளையாடி இன்புற்றிருந்து வாழ்வீர்
தீமையெலாம் அழிந்துபோம் திரும்பி வாரா”



•

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

36) பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

37) நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

38) தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1)  2)  3) 

39) கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


40) இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

41) அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

42) பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

43) கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

44) எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

45) 

படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடிய நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

46) நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

47) மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

48) சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

49) எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

50) காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

51) பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

52) தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

53) மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

54) சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

55) பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

56) காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

57) கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஓரிகாமி 3) அலப்பறை

58) உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

59) குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல்

(30 புள்ளிகள்)

60) பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 36. | 3 | 37. | 1 | 38. | 1 |
| 39. | 2 | 40. | 3 | 41. | 3 |
| 42. | 1 | 43. | 3 | 44. | 3 |
| 45. | 2 | 46. | 3 | 47. | 2 |
| 48. | 2 | 49. | 3 | 50. | 2 |
| 51. | 3 | 52. | 3 | 53. | 3 |
| 54. | 3 | 55. | 2 | 56. | 3 |
| 57. | 2 | 58. | 2 | 59. | 3 |

60. பொருத்தமான வாக்கியங்கள்

## கல்வி tv CHANNEL-1

**09.12.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி tv CHANNEL - 2

**09.12.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



## ‘மனுசி’ சிறுகதை நூல் வெளியீடு

நிந்தவூர், டிசெ. 09

மட்டக்களப்பு மகுடம் கலை, இலக்கிய வட்டத்தின் பௌர்ணமி கலை, இலக்கிய நிகழ்வின் 47 ஆவது தொடராக மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட ஊடகவியலாளரும், தற்போது புலம் பெயர்ந்து சுவிட்சர்லாந்து நாட்டில் தமிழ் இலக்கியத்தளத்தில் இயங்கி வருபவருமான சண். தவராஜாவின் ‘மனுஷி’ சிறுகதை நூல் வெளியீடும், அறிமுக நிகழ்வும் மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

பிரபல இலக்கிய கர்த்தா பேராசிரியர் செ. யோகராசா தலைமையில், மகுடம் வி. மைக்கல் கொலினின் வரவேற்புரையுடன் இடம்பெற்ற இந்த வெளியீட்டு விழா நிகழ்வில், கிழக்கு பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் மா. செல்வராஜா மற்றும் மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும், பேராசிரியர் சி.மௌனகுரு சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் கிழக்கு பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி. ரூபி வலண்டினா பிரான்சிஸ் நூல் நயவுரையாற்றியதுடன், ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலய அதிபர் கவிதாயினி திருமதி. சுதாகரி மணிவண்ணன், வவுனியா தேசிய கல்விக் கல்லூரி விரிவுரையாளர் பத்மா ஜெய சந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மூத்த எழுத்தாளரான கவிஞர் செ. குணரத்தினம் மற்றும் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்க முன்னாள் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் ஏ.எல்.எம். சலீம் ஆகியோர் “மனுஷி“ சிறுகதை நூலின் முதன்மைப் பிரதிகளை இணைந்து பெற்றுக் கொண்டதுடன், நூலாசிரியர் சண். தவராஜா சுவிட்சர்லாந்திலிருந்து ஸூம் தொழில்நுட்பம் மூலம் ஏற்புரையும் ஆற்றினார்.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் இ. தேவ அதிரன் நிகழ்வின் இறுதியில் நன்றியுரையாற்றினார். (அ-06)

# யானை தாக்கி குடும்பப் பெண் வெல்லாவெளியில் உயிரிழப்பு!

மட்டக்களப்பு, டிசெ. 09

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விவேகானந்தபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு காட்டு யானை தாக்கி பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு விவேகானந்தபுரத்துக்குள் புகுந்த காட்டு யானைகள் தனிமையில் உறங்கிக்கொண்டிருந்த பெண் தாக்கிக் கொன்றுள்ளது.

குறித்த பெண்ணின் வீட்டையும் சேதப்படுத்தியுள்ள யானைகள் வீட்டிலிருந்த தோட்டங்களையும் சேதப் படுத்தி சென்றுள்ளது.

காலை வீட்டுக்குச் சென்றவர்களே யானை தாக்கி உயிரிழந்த நிலையில் பெண்ணின் சடலத்தைக் கண்ணுற்றதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.



இந்த யானைத் தாக்குதல் காரணமாக குறித்த பகுதியைச் சேர்ந்த 66வயதுடைய கிருஸ்ண பிள்ளை நீலாம்பிக்கை என்னும் பெண்ணே உயிரிழந்துள்ளார் என வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

அண்மைக் காலமாக வெல்லாவெளிப் பிரதேசத்தில் காட்டு யானைகளின் தாக்குதல்கள் அதிகரித்துவரும் நிலையினை காட்டு யானைகளை கட்டுப்படுத்துமாறு பிரதேச மக்கள் தொடர்ச்சியான கோரிக்கைகளை முன்வைத்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம்

# பொலிஸ் பரிசோதகர் மீதான வழக்கு விசாரணை ஜனவரியில்

கல்முனை, டிசெ. 09

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம் தொடர்பில் கைதான பிரதான பொலிஸ் பரிசோதகர் மீதான வழக்கு விசாரணை மீண்டும் எதிர்வரும் ஜனவரி மாதம் 18 திகதி வரை மறு விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது குறித்த வழக்கு கல்முனை மேல் நீதிமன்ற நீதிவான் ஜெயராமன் ட்ரொக்ஸி முன்னிலையில் விசாரணைக்கு கடந்த திங்கட்கிழமை வந்த போதே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன்படி வழக்கானது விசாரணைக்காக எடுக்கப்பட்ட வேளை பிரதிவாதி சார்பாக ஆஜரான சட்டத்தரணிகள் கடந்த தவணையின்போது குறித்த வழக்கை மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்வதன் அவசியத்தை வலியுறுத்தி விண்ணப்பங்களை சமர்ப்பித்திருந்தனர்.

இதற்கமைய குறித்த வழக்கை மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் விசாரிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் வழக்கை நெறிப்படுத்திய அரச சட்டவாதி மன்றுக்கு தெரிவித்தார்.

குறித்த விசாரணையின் போது மன்றில் பிரதான பரிசோதகரின் கைது தொடர்பில் ஆட்சேபனை முன்வைத்ததுடன் பிரதிவாதியான பொலிஸ் பரிசோதகரை குறித்த வழக்கில் இருந்து பிணையில் விடுதலை செய்யுமாறு விண்ணப்பங்களை முன்வைத்திருந்தனர்.

இதனையடுத்து மீண்டும் நீதிபதி ஜெயராமன் ட்ரொக்ஸினால் எதிர்வரும் ஜனவரி மாதம் 18 ஆம் திகதிக்கு குறித்த வழக்கு மறுதவணை இடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# நிந்தவூரில் திடீரென கடலரிப்பு அனர்த்தம்



நிந்தவூர், டிசெ. 09

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த நிந்தவூர்ப் பகுதியில் ஏற்பட்டுள்ள திடீர் கடலரிப்பு அனர்த்தம் காரணமாக பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

தற்போதைய காலநிலை மாற்றம் காரணமாகவும் வங்காள விரிகுடாவின் தென் பகுதியில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாகவும் இப்பிரதேசத்தில் பெரும் கடல் கொந்தளிப்பும் கடல் பெருக்கமும் ஏற்பட்டுள்ளதன் காரணமாக திடீரென ஒரு பகுதியில் கடலரிப்பு உக்கிரமடைந்துள்ளது.

ஏற்கனவே நிந்தவூரின் சில பகுதிகளில் கடலரிப்பு ஏற்பட்டு பாரிய கற்கள் போடப்பட்டு கடலரிப்புக்கு தடையேற்படுத்தப்பட் டுள்ளபோதிலும் தற்சமயம் நிந்தவூர் கடற்கரைப் பூங்காவுக்கு அண்மித்த பகுதியில் ஏற்பட்டுள்ள உக்கிர கடலரிப்பு காரணமாக பல மீனவ வாடிகள், தென்னந்தோப்புகள் உட்பட கடற்கரை வீதியும் இக்கடலரிப்பினால் அள்ளுண்டு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் பிரதேச மீனவர்களும் பொது மக்களும் பெரும் பரபரப்பிற்கும் அச்சத்திற்கும் உள்ளாகியுள்ளனர்.

தற்பொழுது ஏற்பட்டுள்ள உக்கிர கடலரிப்பு நிலைமையை நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம். அப்துல் லதீப் சக அதிகாரிகள் சகிதமும் பாதுகாப்பு தரப்பினருடனும் நேரில் பார்வையிட்டு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார்.

பிரதேச செயலாளர் லதீப் இந்த திடீர் கடலரிப்பு அனர்த்தம் தொடர்பில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் கரையோர பாதுகாப்பு திணைக்களத்தினர், அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதுடன் கடலரிப்பினை தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் ஆவன செய்துள்ளார்.

இதற்கமைய தற்சமயம் கடற்கரை வீதி வரை கடலரிப்பிற்கு உள்ளாகிய பகுதிகளில் அவசர நடவடிக்கையாக பாரிய கருங்கற்களை இட்டு கடலரிப்பை தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் படவுள்ளதாக பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

இதேவேளை, கடற்றொழிலாளர்கள் கரைகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தமது தோணிகள் மற்றும் இயந்திரப் படகுகளை கடற்கரையை விட்டும் மேட்டுப்பகுதிகளை நோக்கி நகர்த்தியுள்ளனர்.

அத்துடன் இந்த நிலமை காரணமாக கடற்றொழிலும் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(அ-06)

# விபுலபுரியில் களைகட்டிய கார்த்திகை தீபத் திருவிழா



அம்பாறை, டிசெ. 09

இந்துக்களின் கார்த்திகை தீப தினத்தை முன்னிட்டு முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் பிறந்த விபுலபுரியில் தீபத் திருவிழா நிகழ்வு நேற்று முன்தினம் இரவு சிறப்பாக நடைபெற்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த பணிமன்றம் இணைந்து பணிமன்ற செயலாளர் கு.ஜெயராஜி தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

தீபத்திருநாள் தினத்தை முன்னிட்டு கார்த்திகை தீபம் ஏற்றும் நிகழ்வு சுவாமி விபுலாநந்தர் அவதரித்த இல்லத்தில் இடம்பெற்றது.சுவாமியின் இல்லத்தில் விசேட பூசையும் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் இந்து சமய கலாசாரக் கற்கைகள் நிறுவகம் சுவாமி விபுலானந்தர் பயிற்சி நிலைய ,பரதநாட்டிய மாணவிகள் கலந்து கொண்டு கலை நிகழ்ச்சிகளை அளித்தனர். இதில் மன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (அ)



# பெருவின் முதல் பெண் ஜனாதிபதியாக டினா!

லிமா, டிசெ. 09

நீண்ட சர்ச்சைக்கு பிறகு பெருவின் முதல் பெண் ஜனாதிபதியாக 60 வயதான டினா பொலுவார்டே பதவியேற்றுள்ளார்.

காங்கிரஸை சட்டவிரோதமாக மூட முயற்சித்ததைத் தொடர்ந்து இடதுசாரித் தலைவர் பெட்ரோ காஸ்டிலோ பதவி நீக்கம் செய்யப்பட்டு கைதுசெய்யப்பட்டதை அடுத்து அவர் பதவியேற்றார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் எதிர்க்கட்சித் தலைமையிலான சட்டமன்றம் காஸ்டிலோவை அகற்றுவதற்கு ஆதரவாக வாக்களித்தது. அவர் கடந்த செவ்வாய்க்கிழமை சட்டமன்றத்தை தற்காலிகமாக கலைத்து ஆணை மூலம் ஆட்சி செய்யும் திட்டத்தை அறிவித்தார்.

இது, பெருவில் சட்டத்தின் ஆட்சி மற்றும் ஜனநாயகத்தை மீண்டும் நிலைநிறுத்துவதை நோக்கமாகக் கொண்ட நடவடிக்கை என்று காஸ்டிலோ கூறினார்.

ஆனால் இது எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் அவரது துணை ஜனாதிபதி போலுவார்டே உட்பட மற்றவர்களால் சதிப்புரட்சி முயற்சி என்று பரவலாகக் கண்டனம் செய்யப்பட்டது.

இதனால், எதிர்க்கட்சித் தலைமையிலான சட்டமன்றம் காஸ்டிலோவை அகற்றுவதற்கு ஆதரவாக வாக்களித்தது. இதையடுத்து, துணை ஜனாதிபதி டினா பொலுவார்டேவை பொறுப்பேற்க காங்கிரஸ் அழைப்பு விடுத்தது.

இதற்கமைய அவர் தென் அமெரிக்க தேசத்தை வழிநடத்தும் முதல் பெண்மணி என்ற பெருமையுடன் ஜனாதிபதியானார். அவர் 2026ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியாக இருப்பார்.

நெருக்கடியை சமாளிக்க அரசியல் தீர்வுக்கு அழைப்பு விடுத்த பொலுூர்டே, அனைத்து அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய புதிய அமைச்சரவை அமைக்கப்படும் என உறுதியளித்தார்.

'ஒரு சதி முயற்சி நடந்துள்ளது என்றும் அது நிறுவனங்களிலோ அல்லது தெருவிலோ எதிரொலியைக் காணவில்லை' என்றும் அவர் பதவியேற்ற பிறகு கூறினார்.(அ)

# ஜேர்மனியில் அரசை கவிழ்ப்பதற்குச் சதி!

## சந்தேகத்தின் பேரில் 25 பேர் கைது

**பேர்லின், டிசெ. 09**

**அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்தனர் என்ற சந்தேகத்தின்பேரில், ஜேர்மனி முழுவதும் சோதனையில் 25பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.**




தீவிர வலதுசாரி மற்றும் முன்னாள் இராணுவ பிரமுகர்களின் குழு, ரீச்ஸ்டாக் பாராளுமன்ற கட்டடத்தை தாக்கி அதிகாரத்தை கைப்பற்ற தயாராகி வருவதாக கூறப்படுகிறது.

பழைய உயர்குடி குடும்பத்தைச் சேர்ந்த ஹென்ரிச் என பெயரிடப்பட்ட ஒரு நபர், அவர்களின் திட்டங்களுக்கு மையமாக இருந்தார் என கூறப்படுகிறது.

பெடரல் வழக்குரைஞர்களின் கூற்றுப்படி, 11 ஜேர்மன் மாநிலங்களில் கைது செய்யப்பட்டவர்களில் இருவர் என்று கூறப்படும் ரிங்லீடர்களில் இவரும் ஒருவர்.

சதி செய்தவர்களில் தீவிரவாத தாக்குதல்கள் மற்றும் இனவெறி மற்றும் யூத எதிர்ப்பு சதி கோட்பாடுகள் தொடர்பாக நீண்டகாலமாக ஜேர்மன் பொலிஸின் பார்வையில் இருந்த தீவிரவாத ரீச்ஸ்பர்கர் ஜரிச் குடிமக்கள் இயக்கத்தின் உறுப்பினர்களும் அடங்குவர் என்று கூறப்படுகிறது.

மற்ற சந்தேக நபர்கள் கியூஆனொன் இயக்கத்தில் இருந்து வந்தவர்கள், அவர்கள் தங்கள் நாடு ஒரு புராண ஆழமான அரசின் கைகளில் இருப்பதாக நம்புகிறார்கள்.

ஜனநாயகத்தின் எதிரிகளுக்கு எதிராக சட்டத்தின் முழு வலிமையுடன் அதிகாரிகள் பதிலளிப்பார்கள் என்று உட்துறை அமைச்சர் நான்சி பேசர் ஜேர்மனியர்களுக்கு உறுதியளித்தார். (அ)

# ஈரானில் ஐவருக்கு மரண தண்டனை

தெஹ்ரான், டிசெ. 09

ஈரானில் ஆடைக் கட்டுப்பாட்டு சட்ட எதிர்ப்புப் போராட்டம் தொடர்பாக கைது செய்யப்பட்ட 5 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

போராட்டத்தின்போது துணை இராணுவப் படையைச் சேர்ந்த ருவல்லா அஜமியான் என்பவரை கடந்த மாதம் கொலை 3 சிறுவர்கள் உட்பட 16 பேர் மீது குற்றம் சாட்டப்பட்ட நிலையில், அதனை நேற்றுமுன்தினம் புதன்கிழமை உறுதி செய்த நீதிமன்றம், அவர்களில் 5 பேருக்கு மரண தண்டனையும் மேலும் 11 பேருக்கு நீண்ட கால சிறைத் தண்டனைகளும் விதித்தது.

ஈரானின் சர்ச்சைக்குரிய ஆடைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 22 வயதான மாஷா அமீனி, பொலிஸ் காவலில் உயிரிழந்ததைத் தொடர்ந்து அந்த நாட்டில் கடந்த 3 மாதங்களாக தீவிர போராட்டங்கள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சகல வழிகளையும் பாவித்து ரஷ்யா தன்னை தற்காக்கும்!


மொஸ்கோ, டிசெ. 09

கிடைக்கக்கூடிய அனைத்து வழிகளையும் பயன்படுத்தி தனது நலன்களைப் பாதுகாக்க ரஷ்யா போராடும் என்று ஜனாதிபதி விளாடிமிர் புடின் புதன்கிழமை கூறினார்.

புடின் தனது மனித உரிமைகள் சபையின் தொலைக்காட்சி வருடாந்த அமர்வில் பேசுகையில்-

எங்கள் தரப்பிலிருந்து ஒரே ஒரு பதில் மட்டுமே இருக்க முடியும் - நமது தேசிய நலன்களுக்கான நிலையான போராட்டம். அதைத்தான் செய்வோம். மேலும் யாரும் வேறு எதையும் எண்ண வேண்டாம்.

நாங்கள் இதை பல்வேறு வழிகளிலும் வழிகளிலும் செய்வோம். முதலில், நிச்சயமாக, நாங்கள் அமைதியான வழிகளில் கவனம் செலுத்துவோம், ஆனால் வேறு எதுவும் இல்லை என்றால், எங்கள்வசம்உள்ள அனைத்து வழி களிலும் நம்மை தற்காத்துக்கொள்வோம்.- என்றார்.



உக்ரைன் போரின் 10ஆவது மாதத்தில், ரஷ்ய கட்டுப்பாட்டில் உள்ள டொனெட்ஸ்க் பிராந்தியத்தின் குடியிருப்புப் பகுதிகளில் உக்ரேனியப் படைகள் ஷெல் தாக்குதல் நடத்துவதாக மனித உரிமைக் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்த கருத்துகளுக்குப் பதிலளித்த புடின் இவ்வாறு கூறினார். (அ)

# சாள்ஸ் மன்னரின் உருவம் பொறித்த நாணயம் புழக்கம்!

லண்டன், டிசெ. 09



மூன்றாம் சார்லஸ் மன்னரின் உருவம் பொறிக்கப்பட்ட மில்லியன் கணக்கான 50 பென்ஸ் நாணயங்கள் நாடு முழுவதும் உள்ள தபால் நிலையங்கள் வழியாக நேற்று வியாழக்கிழமை முதல் புழக்கத்தில் இருக்கும்.

புதிய மன்னரின் படத்தைக் கொண்டு அதிக அளவில் தயாரிக்கப்பட்ட முதல் நாணயங்கள் இவையாகும்.

4.9 மில்லியன் புதிய நாணயங்கள் தபால் நிலையங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. இது புழக்கத்துக்கு ஒதுக்கப்பட்ட மொத்த எண்ணிக்கையில் பாதி ஆகும்.

எனினும், மறைந்த ராணியின் உருவம் கொண்ட நாணயங்கள் இன்னும் கடைகளில் ஏற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நிலவை மிக நெருக்கமாக படம்பிடித்த ஆர்ட்டெமிஸ்

வொஷிங்டன், டிசெ. 09

நாசாவின் ஆர்ட்டெமிஸ் 1 ஓரியன் விண்கலம் நிலவை மிக அருகில் புகைப்படங்கள் எடுத்த நிலையில் மீண்டும் பூமிக்கு திரும்பவுள்ளது.

புதுமையான தொழில்நுட்பத்தை பயன்படுத்தி முன்பைக் காட்டிலும் துல்லியமான முறையில் நிலவை ஆராய்ச்சி செய்யும் நோக்கில் ஆர்டெமிஸ் திட்டத்தை நாசா கையில் எடுத்திருந்தது. அதன்படி ஒகஸ்ட் மாதமே ஆர்ட்டெமிஸ் 1 ஓரியன் விண்கலத்தை விண்ணில் செலுத்த நாசா தயாராகி இருந்தது. எனினும், அந்த முயற்சி தோல்வியில் முடிந்தது. இதன்பின், கடந்த மாதம் நிலவுக்கு ஆர்ட்டெமிஸ் 1 ஓரியன் விண்கலத்தை நாசா விண்ணில் செலுத்தியது.

ஆர்டெமிஸ் திட்டத்தை வரலாற்று சாதனை என்று விஞ்ஞானிகள் புகழ்ந்தனர். மேலும், இந்தத் திட்டம் வெற்றிக்கரமாக நிறைவேற்றப்பட்டால், அடுத்த 8 ஆண்டுகளுக்குள் மனிதர்கள் நிலவுக்குச் செல்லலாம் எனவும் நாசா விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.



தற்போது, ஒரு மாதம் ஆன நிலையில், விண்ணில் செலுத்தப்பட்ட ஆர்ட்டெமிஸ் 1 விண்கலம், நிலவுக்கு 130 கி.மீ. தொலைவிலிருந்து துல்லியமாக படமெடுத்து அனுப்பியுள்ளது. அதுவும் மிக நெருக்கமாக நிலவின் மேற்பரப்பை ஆர்ட்டெமிஸ் 1 எடுத்துள்ள படங்கள் கண்களைப் பறிக்கும் வண்ணம் அமைந்துள்ளன.

நிலவை புகைப்படம் எடுத்த நிலையில், மீண்டும் பூமி திரும்ப உள்ளது ஆர்ட்டெமிஸ் 1. அதன்படி டிசெம்பர் 11 ஆம் திகதி ஆர்ட்டெமிஸ் 1 பூமிக்கு திரும்பும் என்று நாசா தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 2024ஆம் ஆண்டுக்குள் மீண்டும் நிலவுக்கு மனிதர்களை அனுப்ப நாசா தீவிரமாக பணியாற்றி வருகிறது. இதற்காக ஓரியன் என்ற விண்கலத்தை நாசா உருவாக்கியது. இந்த விண்கலம் கடந்த 2014ஆம் ஆண்டில் ஆளில்லாமல் விண்வெளிக்கு செலுத்தப்பட்டு பத்திரமாக பூமிக்கு திரும்பியது. இந்த நிலையில் நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் ஆர்டெமிஸ் திட்டத்தில் நாசா ஆர்வம் காட்டி வருகிறது. (அ)

# போதைப்பொருள் மூலம் நாட்டை அழிப்பதற்கு சதி!

## விஜயதாஸ ராஜபக்ஷ குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ. 09

**போதைப் பொருள் பரவல் காரணமாக அடுத்த இரண்டு, மூன்று ஆண்டுகளில் நாட்டில் இளம் சமுதாயம் என்ற ஒன்று மீதமிருக்காது எனவும் நாட்டை அழிக்கும் சதித்திட்டம் முன்னெடுக்கப்படுவதாகவும் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று வரவு-செலவுத்திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் உள்ள பிரபல பாடசாலைக்குள் ஐஸ் என்ற போதைப் பொருள் பரவியுள்ளது. பெண்கள் பாடசாலைகளுக்குள் இந்த போதைப் பொருள் சென்றுள்ளது.

பாடசாலைகளின் பெயர்களுக்கு களங்கம் ஏற்படும் என்று கடந்த காலங்களில் அவற்றின் பெயர்களை வெளியிடுவதில்லை. ஆனால் தற்போது அச்சப்பட தேவையில்லை. பிரபல பாடசாலை முதல் மேல் கீழ் வரை அனைத்துப் பாடசாலைகளின் பெயர்களையும் வெளியிட முடியும். அந்த அளவுக்கு ஐஸ் போதைப் பொருள் பாடசாலைகளுக்குள் பரவியுள்ளது.

பெண் மாணவிகளும் ஐஸ் போதைப் பொருளை பயன் படுத்துகின்றனர்.

ஐஸ் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களின் ஆயுள் காலம் இரண்டு ஆண்டுகள் மட்டுமே என்பது மருத்துவர்களின் ஆராய்ச்சி முடிவாக உள்ளது என்பதை நான் அன்று அது தொடர்பான சட்ட மூலத்தை சமர்ப்பிக்கும்போது தெரிவித்திருந்தேன்.

ஐஸ் போதைப்பொருளை பயன்படுத்துவோர் இரண்டு வருடங்களில் அவர்களின் மூளையில் உள்ள உயிரணுக்கள் இறந்து, அவர்கள் இறந்து விடுவார்கள். நாட்டில் சுமார் 5 லட்சம் இளைஞர், யுவதிகள் போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளனர்.

கடுமையான சட்ட நடவடிக்கைகளை எடுக்காது போனால், இன்னும் இரண்டு, மூன்று ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை இரட்டிப்பாக மாறுவதை தடுக்க முடியாது. தற்போது அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

சட்டம் இயற்றினால் போதாது. அதனை நடைமுறைப்படுத்த வேண்டும். நடைமுறைப்படுத்த முயற்சித்து வருகின்றோம். அடுத்த இரண்டு, மூன்று ஆண்டுகளில் இளைஞர்கள் என்ற சமுதாயம் நாட்டில் இருக்காது. இலங்கையர்கள் என்ற இனம் மீதமிருக்காது.

நாட்டை முற்றாக அழிக்கும் சதித்திட்டம், சூழ்ச்சி தற்போது முன்னெடுக்கப்படுகிறது. உண்மை நிலவரம் எண்னவென்று தெரியாது, பாடசாலைகளுக்கு இடையில் ஐஸ் போதைப் பொருளை விநியோகிக்க வெளி நாடுகளில் இருந்து இலங்கைக்கு அந்த போதைப் பொருள் இலவசமாக விநியோகிப்பதாக புலனாய்வு தகவல்கள் இருக்கின்றன.

இதற்கு அடிமையான பின்னர் இலங்கையர்கள் என்ற இனம் முடிவுக்கு வந்து விடும். அழித்து ஒழிக்கும் சர்வதேச சூழ்ச்சிகள் இருக்கின்றன. காரணம் இன்றி புலனாய்வாளர்கள் தகவல்களை வெளியிடவும் மாட்டார்கள்.

அது பற்றியும் நாம் தேடி கண்டறியவேண்டும். எமக்கு தற்போது இருக்கும் பொருளாதார பிரச்சினையை விட இளம் சமுதாயம் போதைப் பொருளுக்கு அடிமையாவது பாரதூரமான பிரச்சினை.

எமக்கு நாடு இருப்பதால் பயனில்லை. இந்த தாய் நாட்டை பாதுகாக்க இளைய சமுதாயம் இருக்க வேண்டும். இன்னும் சில வருடங்களில் இலங்கையர்கள் என்ற இனம் மீதமிருக்காது.

இதனால், அனைத்தையும் விட போதைப் பொருள் தடுப்புக்கு முக்கியத்துவத்தை வழங்கவேண்டும். நாங்கள் அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சியாக மற்றவர்கள் செய்த நன்மை, தீமைகளை பற்றி பேசுகிறோம்.

தினமும் பாராளுமன்றத்தில் ஒருவருக்கு ஒருவர் தூற்றிக் கொள்வதன் மூலம் இந்த பிரச்னை தீராது.

பாராளுமன்றம் என்பது டைற்றானிக் கப்பல் போன்றது. அனைத்து இடங்களிலும் ஓட்டைகள் ஏற்பட்டுள்ளன.எப்போது மூழ்கும் என்று தெரியாது.

பாராளுமன்றத்தில் இரண்டு பக்கமாக பிரிந்து சண்டையிடும் காலம் இது வல்ல. நாட்டுக்காக அனைவரும் ஒன்றாக இணைந்து, போதைப் பொருள் கடத்தல்காரர்களிடம் இருந்து நாட்டை காப்பாற்றவேண்டும்-என்றார். (அ)

# மீண்டும் தலைதூக்கும் டெங்கு

கொழும்பு, டிசெ. 09

நாட்டில் டெங்கு நோயின் பரவல் வேகமாக அதிகரித்து வருவதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த வாரத்தில் மாத்திரம் 1,602 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கம்பஹா மாவட்டத்தில் அதிகளவாக 390 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும்,

கொழும்பு மாவட்டத்தில் 272 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

அதுமட்டுமன்றி, கடந்த வாரத்தில் யாழ்ப்பாணம் புத்தளம் மற்றும் மாவட்டங்க ளில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, இலங்கையில் இந்த வருடம் 68,928 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். கடந்த வருடம் இந்த காலப்பகுதியில் 27,844 டெங்கு நோயாளர்கள் மாத்திரமே கண்டறியப்பட்டுள்ளனர்.

# நாமலுக்கு எதிரான வழக்கு விசாரணைகள் ஒத்திவைப்பு

கொழும்பு, டிசெ. 09

பாராளுமன்ற உறுப்பினராக பணியாற்றி சட்டவிரோதமாக சம்பாதித்த பணத்தை நிறுவனமொன்றில் முதலீடு செய்தமை தொடர்பில் நாமல் ராஜபக்ஷ உட்பட சிலருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் 2023ஆம் ஆண்டு மே மாதம் 11ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த முறைப்பாடு நேற்று வியாழக்கிழமை கொழும்பு மேலதிக நீதிவான் மஞ்சுள ரத்நாயக்க முன்னிலையில் அழைக்கப்பட்டது.

இதன்போது குற்றப் புலனாய்வுத் திணைக்களம், சம்பவம் தொடர்பான விசாரணைகள் நிறைவடைந்துள்ளதாகவும், சட்டமா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் நீதிமன்றத்துக்கு அறிவித்த நிலையிலேயே வழக்கு விசாரணை ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

(அ)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வர்த்தமானி விரைவில் வெளியாகும்

கொழும்பு, டிசெ. 09

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்புமனுக்களை இந்த மாதத்தின் இறுதி வாரத்திற்குள் கோருவதற்கு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

நேற்று வியாழக்கிழமை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு கூடி இந்த தீர்மானத்தை மேற்கொண்டதாக ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.



அதன்படி அரசியலமைப்பின் 98ஆவது சரத்தின் 08 ஆவது உப சரத்துக்கு அமைய, உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்படக்கூடிய உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இதற்கான வர்த்தமானி விரைவில் வெளியிடப்படும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார். (அ)

# கொழும்பு தேசிய வைத்தியசாலை கனிஷ்ட ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, டிசெ. 09

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் கனிஷ்ட ஊழியர்கள் நேற்று காலை 8 மணிமுதல் 4 மணித்தியாலங்கள் பணிப் பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.

"வாழ்க்கைச் செலவு உயர்வு, அடக்குமுறையை நிறுத்துதல், வரிச்சுமை மற்றும் பொருட்களின் விலையைக் குறைத்தல், சுகாதாரப் பாதுகாப்புக்கு 5 சதவீத ஒதுக்கீடு மற்றும் நாணய நிதிய முன்மொழிவுகளுக்கு உட்பட்ட மக்கள் விரோத பட்ஜெட்டை தோற்கடித்தல்" என்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த வேலைநிறுத்தம் காரணமாக வைத்தியசாலைப் பணிகள் பாதிக்கப்பட்டதுடன், சிகிச்சை பெற வந்த நோயாளர்களும் மிகுந்த சிரமத்துக்குள்ளாகியதாக தெரிவிக்கப்பட்டது.

# மலையகத்துக்கான அஞ்சல் ரயில்கள் ரத்து

கொழும்பு, டிசெ. 09

கொழும்பு, கோட்டை மற்றும் பதுளைக்கு இடையிலான இரண்டு இரவுநேர அஞ்சல் ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒஹியா மற்றும் இதல்கஸ் ஹின்ன இடையே ரயில் பாதையில் மரம் ஒன்று சரிந்து வீழ்ந்ததையடுத்து, கொழும்பு, கோட்டை மற்றும் பதுளைக்கு இடையிலான இரண்டு இரவு நேர அஞ்சல் ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்
துயர் நெற் THUYAR.NET
துயர் நெற்றில் பிரசுரமாகும் அனைத்து விளம்பரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்
ஈழநாடு Eelanadu
ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும் யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்
DAN news
டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்
விபரங்களுக்கு: thuyar.net Tel: 0094 752 225 225

# 2023 ஒகஸ்ட் மாதம் ஜனாதிபதி தேர்தல்!

## ஐக்கிய தேசியக் கட்சி கூறுகிறது

கொழும்பு, டிசெ. 09

**''நாட்டு மக்கள் கோரிவருவதால் 2023 ஒகஸ்ட் மாதமளவில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும் என எதிர்பார்க்கின்றோம்" - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.**

ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பு அக்கட்சியின் தலைமையகத்தில் சிறிகொத்தவில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே ஐ.தே.கவின் முக்கியஸ்தரும், முன்னாள் அமைச்சருமான நவீன் திஸாநாயக்க ஜனாதிபதி தேர்தலுக்கான கால எல்லை குறித்து அறிவிப்பு விடுத்தார்.

"உள்ளாட்சிசபைத் தேர்தல், பொதுத்தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தல் என்பன ஒரே நாளில் நடத்தப்பட வேண்டும். அப்போது செலவீனத்தையும், வீண்விரயங்களையும் குறைக்க முடியும். தனித்தனியே தேர்தல்களை நடத்துவது இனியும் ஏற்புடையது அல்ல. இது தொடர்பில் ஜனாதிபதியிடம் யோசனை முன்வைக்கப்படும்." - எனவும் நவீன் திஸாநாயக்க குறிப்பிட்டார்.

அத்துடன், "2023 மார்ச் மாதத்துக்கு பிறகு ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியும். எனவே, 2023 ஒகஸ்ட் மாதமளவில் ஜனாதிபதி தேர்தலை எதிர்பார்க்க முடியும். நாட்டு மக்கள் தேர்தலை கோருகின்றனர். மக்கள் ஆணையுடன் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி பதவி விலகியுள்ளதால், ஜனாதிபதி தேர்தலை நடத்துவதே ஏற்புடையதாக இருக்கும். " - எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, 2023 பெப்ரவரியில் உள்ளாட்சிச் சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசு தயாராகி வருவதாக நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# இனிமேல் அரிசி இறக்குமதி செய்யும் தேவை ஏற்படாது!

### அமைச்சர் மஹிந்த அமரவீர

கொழும்பு, டிசெ. 09

எதிர்காலத்தில் அரிசியை இறக்குமதி செய்யவேண்டிய தேவை ஏற்படாது என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

வரவு - செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் நேற்று முன் தினம் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பெரும்போகத்துக்குத் தேவையான உர விநியோகம் இடம்பெறுகிறது.

சோள உற்பத்தியாளர்களுக்கு உரம் மற்றும் விவசாயிகளுக்கு 20 ஆயிரம் ரூபாய் பெறுமதியான சேதனப் பசளை வழங்கப்படுகிறது.

ஒரு ஹெக்ரேயரை விட குறைந்த நிலங்களுக்கான உர விநியோகம் இலவசம். அறுவடைக் காலப்பகுதியில் எரிபொருள் இலவசமாக வழங்கப்படவுள்ளது - என்றார். (அ)

# சிறுமியை துஷ்பிரயோகம் செய்த வங்கி முகாமையாளர் சிக்கினார்!

கொழும்பு, டிசெ. 09

கொழும்பில் உள்ள அரச பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் 14 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் 50 வயதுடைய தனியார் வங்கி முகாமையாளர் ஒருவரை கைது செய்துள்ளதாக பம்பலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தோடு, சிறுமி களுபோவில போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரின் மனைவி உயிரிழந்துள்ளதாகவும், அவர் 13 மற்றும் 17 வயதுடைய இரண்டு பெண் பிள்ளைகளின் தந்தை எனவும் பொலிஸார் கூறினர்.

சிறுமி கொழும்பை அண்மித்த பிரதேசத்தில் வசிப்பவர். குறித்த சம்பவம் தொடர்பில், மேலதிக விசாரணைகளை பம்பலபிட்டி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# வவுனியாவில் இலவசமாக 5326 விவசாயிகளுக்கு உரம்




வவுனியா, டிசெ. 09

வவுனியா மாவட்டத்தில் 2.5 ஏக்கருக்கு குறைவான அளவில் நெற் செய்கையை மேற்கொள்ளும் 5326 விவசாயிகளுக்கு இலவசமாக உரம் வழங்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக விவசாயிகள் தங்களுக்கு தேவையான உரத்தை பெற்றுக்கொள்வதில் கடும் பிரச்னைகளுக்கு முகம் கொடுத்ததுடன், தனியார் துறையினரிடம் இருந்து அதிக விலை கொடுத்து உரத்தைக் கொள்வனவு செய்யவேண்டிய நிலையும் காணப்பட்டது.

இந்நிலையில் யு.எஸ்.எய்ட் நிறுவனத்தின் பங்களிப்புடன் நாடு பூராகவும் உள்ள கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் உள்ள கமநல சேவை நிலையங்களின் ஊடாக இலவசமாக உரம் வழங்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வவுனியா மாவட்டத்தில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் உள்ள 09 கமநல சேவை நிலையங்களில் இலவசமாக உரம் வழங்கப்படவுள்ள நிலையில், நேற்று கோவில் குளம் கமநல சேவை நிலையத்தில் ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது. 535 விவசாயிகளுக்கு அங்கு இலவசமாக உரம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கோவில்குளம் கமநலசேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ரெ.காஞ்சனா, விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் பதூர்தீன் ஹஸ்புல்லா மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டனர். (அ)

# கத்தியை காட்டி சங்கிலியறுத்த திருடன் பெண் எடுத்த செல்பியினால் சிக்கினான்!

கொழும்பு, டிசெ. 09

திருடன் ஒருவன் தனது கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி, தங்கச்சங்கிலியை அபகரித்தபோது, துணிச்சலுடன் செல்பி எடுத்த பெண்ணின் சமயோசிதத்தால் திருடன் சிக்கினான்.

திருட்டில் ஈடுபட்ட 2 மணித்தியாலங்களில் திருடன் சிக்கினான்.

ஹோமாகம பொலிஸ் பிரிவில் இந்த சம்பவம் நடந்தது.

வீதியில் தனித்துச் சென்ற பெண்ணை, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வழிமறித்தனர். ஒருவன் கத்தியெடுத்து, பெண்ணின் கழுத்தில் வைத்து, சத்தமிட்டால் கழுத்தை அறுப்பதாக மிரட்டியுள்ளான்.

பின்னர், பெண்ணின் கழுத்தில் இருந்த தங்கச்சங்கிலியை அறுத்தெடுத்துள்ளனர்.

இந்தளவு அனர்த்தம் நடந்து கொண்டிருந்தபோதும், அந்தப் பெண் சமயோசிதமாக ஒரு செயலைச் செய்தார். தனது கையிலிருந்து மொபைல் போனின் மூலம், திருடனுக்கு சந்தேகம் ஏற்படாத விதத்தில் செல்பி எடுத்தார். கழுத்தில் கத்தி வைக்கப்பட்டிருந்த நிலையிலும், அந்த பெண் துணிச்சலாக செயற்பட்டது, திருடனை அடையாளம் காண உதவியது.

வழிப்பறி தகவல் அறிந்து அந்த பகுதிக்கு சில நிமிடங்களில் பொலிஸார் வந்தபோது, அந்த பெண், தான் எடுத்த செல்பி படத்தை பொலிஸாருக்கு வழங்கினார்.

அந்த பொலிஸார் உடனடியாக சம்பவம் தொடர்பில் ஹோமாகம பொலிஸாருக்கு அறிவித்து செல்பி படத்தையும் அனுப்பினர்.

உடனடியாக விரைந்த பொலிஸ் குழுவினர் பிட்டிபன்ன பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு கொள்ளையர்களை கைது செய்த னர். அவர்களிடம் இருந்து சுமார் பத்தரை கிராம் ஹெரோயின், திருடிய சங்கிலியை கொடகம வங்கியொன்றில் 90,000 ரூபாய்க்கு அடகு வைத்த ஆவணம், ஒரு கத்தி என்பவற்றை மீட்டனர். (அ)

# வீட்டின்மீது மரம் முறிந்து வீழ்ந்து ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 09

உடப்புஸ்ஸல்லாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்கடபத்தனை கிராமத்தில் வீடு ஒன்றின் மீது மரமொன்று முறிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை 4.15 மணியளவில் மரம் ஒன்றின் கிளைகள் வீழ்ந்துள்ள நிலையில் அவ்வீட்டின் ஒரு பகுதி உடைந்து வீட்டில் வசித்து வந்த நபர் ஒருவர் உயிரிழந்ததாக உடப்புஸ்சலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

கூறினர். சம்பவத்தை அறிந்த கிராம வாசிகள் விரைந்து வீட்டில் சிக்கியிருந்தவர்களை மீட்டனர்.

சம்பவத்தில் உயிரிழந்த நபர் பலத்த காயங்களுடன் இரத்த வெள்ளத்தில் உயிருக்குப் போராடிய நிலையில் மீட்க்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர்



இந்த சம்பவத்தில் 55 வயதுடைய வீ.கே.ஆரியபால என்பவரே உயிரிழந்தார்.

சம்பவம் இடம்பெற்ற போது வீட்டில் நால்வர் இருந்துள்ளனர் எனப் பொலிஸார் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் உடப்புஸ்ஸல்லாவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# எஸ்.ரி.எவ். எனக்கூறி 27 இலட்சம் ரூபா பணத்தை கொள்ளையடித்தவர் கைது!

கொழும்பு, டிசெ. 09

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் அதிகாரிகள் எனக் கூறி பம்பலப்பிட்டி டூப்ளி கேஷன் வீதியில் காரை நிறுத்தி 27 இலட்சம் ரூபா பணத்தை கொள்ளையடித்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன் தினம் பிற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சந்தேக நபர் கைது செய்யப் பட்டதுடன் மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் எனக் கூறி மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் காரை நிறுத்தி சோதனையிட முற்பட்டபோது காரின் உரிமையாளரிடம் 27 இலட்சம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் ஒருவர் தப்பிச் சென்றுள்ளார். கார் உரிமையாளரும் மற்றுமொரு நபரும் இணைந்து தப்பியோடிய நபரை பொன்சேகா வீதியில் வைத்து மடக்கிப்பிடித்து பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் கொழும்பில் வசிக்கும் 41 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## தமிழ்த் தேசிய....

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் அழைப்பு விடுத்திருந்தார். இதைத் தொடர்ந்து ஜனாதிபதியுடனான பேச்சில் பேசப்பட வேண்டிய விடயங்கள் குறித்து அண்மையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் இல்லத்தில் கூடி ஆராய்ந்தன. இதைத் தொடர்ந்து பேச்சுக்கான பொறிமுறை ஒன்றை தயாரிக்கவும் திட்டமிட்டன. இந்நிலையிலேயே ரெலோ கட்சியின் நிலைப்பாடு - அதன் பொறிமுறை குறித்து அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். அதிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

தமிழ் தேசிய அரசியல் தரப்பில் செயல்படும் அனைவரும் சமஷ்டி முறையான அரசியல் தீர்வே இறுதி நிலைப்பாடு என்பதை ஒருமித்த குரலில் தெரிவித்துள்ளனர். இதில் குறிப்பிடும் அம்சமாக ஒற்றையாட்சி அற்ற, தமிழ் மக்களின் தாயக பூமியான வடக்கு - கிழக்கு இணைவு, எமது சுயநிர்ணய உரிமையை அனுபவிக்கக்கூடிய முற்று முழுதாக அதிகாரப் பகிர்வோடு கூடிய அலகாக அமைய வேண்டும் என்பதில் தெளிவான நிலைப்பாட்டில் உள்ளோம். அதேநேரம் அரசியல் யாப்பில் ஏற்கனவே உள்ள அதிகாரங்களை முற்றும் முழுதாக நடைமுறைப் படுத்தி மாகாண சபை தேர்தலை விரைந்து நடத்த வேண்டும் என்பதிலும் ஒத்த நிலைப்பாட்டில் உள்ளோம்.

பிராந்திய வல்லரசாகவும், தமிழ் மக்களுடைய இனப் பிரச்னையில் ஆரம்ப கட்டத்தில் இருந்து அக்கறையோடு செயல்பட்டு வந்த அண்டை நாடாகவும் இலங்கை அரசியலிலே செல்வாக்கு செலுத்தக் கூடிய நிலையிலேயே உள்ளமையாலும், இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் ஒரு தரப்பாக இருப்பவர்களாகவும் ஏற்கனவே இலங்கை அரசியல் யாப்பிலே அதிகார பகிர்வுக்கான ஓர் ஏற்பாட்டை செய்தவர்கள் என்ற வகையிலும் தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளை தீர்க்கக்கூடிய அரசியல் தீர்வை வலியுறுத்தி வருபவர்களாகவும் இருப்பதனாலே இந்தப் பேச்சு இந்தியாவின் தலைமையிலான மேற்பார்வையில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

சர்வதேச நாடுகளான பிரித்தானியா, அமெரிக்கா, கனடா, ஜேர்மனி மற்றும் நாடுகளும் இந்தியாவுடன் இணைந்து இந்தப் பொறிமுறையில் பங்குபெறல் அவசியமானது. ஐ. நா. பொதுச் சபை, பாதுகாப்பு சபை மற்றும் மனித உரிமை பேரவை என்பவற்றில் செல்வாக்கு செலுத்தக்கூடியவர்களாக - ஈழத் தமிழர்கள் விவகாரத்தில் அக்கறை கொண்டவர்களாகவும் முன் நின்று செயல்படுபவர்களாகவும் பல சர்வதேச நாடுகளில் ஏற்பட்ட இது போன்ற பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு நமது பங்களிப்பை வழங்கியதோடு அதுபற்றிய அனுபவம் உள்ளவர்களாகவும் இலங்கை அரசாங்கத்தின்மீது பொருளாதார ரீதியாகத் தாக்கத்தை செலுத்தக் கூடியவர்களாகவும் மற்றைய நாடுகளையும் தங்கள்பின் அணி திரட்டக் கூடிய வல்லமை கொண்டவர்களாகவும் இருப்பதானாலும் இவர்கள் பங்களிப்பு அவசியமானது.

குறிப்பாக பிரித்தானியா இலங்கையை காலனித்துவ ஆட்சியில் வைத்திருந்த நாடாகவும் இங்கு நிலவியிருந்த சமஷ்டி ஆட்சி முறையை ஒற்றையாட்சி முறைமைக்கு மாற்றியவர்களும் அதனால் தமிழ் மக்களுக்கு பொறுப்பு கூறுவதற்கு கடமைப்பட்டவர்களாகவும் இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஐ. நாவின் பிரதிநிதித்துவம் இந்த பொறிமுறையில் அவசியமாகிறது. பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் விடயங்களை தாண்டி தமிழ் மக்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட யுத்த குற்றங்கள் மனித உரிமைகள் மீறல் மற்றும் இனப்படுகொலை என்பன மீள நிகழாமையை உறுதிப்படுத்துவது நிரந்தரமான அரசியல் தீர்வாகும். மேலும் உலக நாடுகளில் ஏற்பட்ட அரசியல் பிரச்னைகளை ஆணைக்குழுக்கள், தீர்ப்பாயங்கள் மற்றும் நிபுணர் குழுவின் மூலம் தீர்த்து வைத்த அனுபவமும் வரலாற்றையும் கொண்டது ஐ. நா.

மேற்கூறிய பிராந்திய சர்வதேச வல்லரசுகளின் நிபுணர்களும் ஐ. நாவின் நிபுணர்களும் தமிழ் மக்கள் தரப்பில் அரசியல் யாப்பு தயாரிப்பு சம்பந்தமான நிபுணர்களும் எல்லைகள் மீள் நிர்ணயம் நிர்வாகம் மற்றும் நிதிய ஆளுமை சம்பந்தமான நிபுணர்களும் கொண்ட குழு உருவாக்கப்பட வேண்டும். இந்த குழுவில் தமிழ் மக்கள் சார்பில் புலம் பெயர் உறவுகளில் இருந்து நிபுணர்களும் இடம் பெறுவர். தவிர ஆலோசனை வழங்கவும் நிபுணர்கள் கொண்ட ஆலோசனைக் குழுவும் உருவாக்கப்பட வேண்டும்.

தமிழ் தேசியத் தரப்பினரும் புலம் பெயர் உறவுகளும் ஒருமித்து இந்த நிபுணர் குழுவுக்கான செயல்பாட்டை உறுதி செய்யவும் ஏதுவான அரசியல் சூழ்நிலைகளை உரிய தரப்புகளுடன் இணைந்து ஏற்படுத்துவதும் முக்கியமானதாகும். இந்த அடிப்படையிலான பங்களிப்புடனும் வழிகாட்டுதலுடனும் அரசியல் தீர்வு எட்டப்படுதல் வேண்டும். அதற்கான தொடர்ச்சியான செயல்பாடும் அவசியமாகும்.

அரசியல் தீர்வானது இந்த நிபுணர் குழுவினர்கள் வழிகாட்டுதலிலே முற்றும் முழுதாக நடைமுறைப்படுத்தப்படும் வரை நாங்கள் பரிந்துரைத்த பொறிமுறை செயல்பாட்டில் இருக்க வேண்டும். முற்றுமுழுதான அதிகார பகிர்வு முறைமையை எங்கிருந்து ஆரம்பிப்பது, எப்படி நடைமுறைப்படுத்துவது, எப்படி முற்றுப்பெற வைப்பது என்பதை இந்தப் பொறிமுறையின் வழிகாட்டுதலுடன் தமிழ் தலைவர்கள் ஒப்பேற்ற வேண்டும்.

கடந்த காலங்களில் அதிகாரப் பகிர்வு முறைமை அரசியல் யாப்பிலே உருவாக்கப்பட்டு இருந்தாலும் அவை நடைமுறைப்படுத்தப்படாமல் வெற்றுக் காகிதங்களாகவே அமைந்துள்ளன. அப்படி அல்லாமல் நியாயமான அரசியல் தீர்வை எட்டுவதும் அதனூடான அதிகார பகிர்வை உறுதி செய்து நடைமுறைப் படுத்தும் வரை இந்தப் பொறிமுறையை தொடர்ச்சியான செயல்பாட்டில் வைத்திருப்பது அவசியமானது. தமிழ் மக்களுடைய நிரந்தரமான அரசியல் விடிவை எட்டுவதற்கு அனைத்து தமிழ் தேசிய தரப்பினரும் நாட்டிலும் புலம்பெயர் தேசத்திலும் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும் என்பதே எமது கோரிக்கை.

அரசுடனான பேச்சை ஆரம்பித்து இறுதி இலக்கை எட்டும் வரைக்குமான விடயங்களை அரசியல் மாற்றங்களைத் தாண்டி தொடர்ச்சியாக முன்னெடுக்கும் பொறிமுறையை நாங்கள் முன்மொழிந்திருக்கிறோம். தமிழ்த் தேசியப் பரப்பில் செயலாற்றும் அனைத்துத் தரப்பினரும் இந்தப் பொறிமுறையை மேலும் செழுமைப்படுத்த உங்கள் பங்களிப்பை கோரி நிற்கிறோம். குறை குற்றம் கூறி, ஒருவர் மீது ஒருவர் சேறு வாரி வீசிக் காலத்தை வீணடிக்கும் வெட்டி விவாதங்களை தவித்துக் கொள்ளுமாறு அனைத்து தரப்பினருக்கும் வேண்டுகோள் விடுகிறோம்.

உங்கள் பரிபூரண ஆதரவுடன் மேற்குறிப்பிட்ட பொறிமுறையின் உருவாக்கம், நடைமுறை, மற்றும் செயல்பாட்டை முன்னெடுக்கவும் நாங்கள் தயாராக உள்ளோம். தமிழ்த் தேசிய இனத்தின் இறுதி இலக்கான அரசியல் தீர்வை பெற்றுக் கொள்வதற்கான இந்த அரிய சந்தர்ப்பத்தை ஒருமித்து பயன்படுத்துவோமாக - என்றுள்ளது. (ஐ)

## காற்று மாசுபாடு....

இதேசமயம், ஐ. கியூ. எயார் (IQ Air) என்ற சுவிற்சர்லாந்து நாட்டை சேர்ந்த வளியின் தர தொழில்நுட்ப நிறுவனத்தின் தளத்திலும் இந்த விடயங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்த நிறுவனத்தின் தரவுப்படி யாழ்ப்பாணம் - வடக்கு மாகாணத்தின் காற்று தரச் சுட்டி 180 ஏ. கியூ. ஐ. என்ற மோசமான நிலையை எட்டியுள்ளதை வெளிப்படுத்தியுள்ளது.

தற்போது நிலவும் மோசமான கால நிலை காரணமாக இந்தியாவிலிருந்து வரும் மாசுபட்ட காற்றாலேயே இலங்கை பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் காற்று மாசுபாடானது பி. எம்.2.5 என்ற அளவை எட்டியுள்ளது. இந்த மோசமான நிலைமையை இலங்கையால் கட்டுப்படுத்த முடியாது. எனவே, முதியவர்கள், குழந்தைகள், இதய நோயாளிகள், சுவாசம் சார்ந்த நோயுள்ளவர்கள் முடிந்தவரை வீடுகளில் இருப்பது நல்லது. வெளியே நடமாடுபவர்கள் முகக் கவசத்தை அணிவது அவசியமானது என்றும் குறிப்பிட்டார்.

இதனிடையே, ஐ. கியூ. எயார் நிறுவனத்தின் தரவுப்படி, கடந்த சில நாட்களை விட நேற்று முன்தினம் மாசுபட்ட காற்று உச்சளவில் காணப்பட்டது. மாலை 6.30 மணியளவில் காற்றின் மாசு 222 ஏ. கியூ. ஐ. என்ற மாசுபாட்டை எட்டியதுடன், அன்றைய தினம் காற்று மாசுபாடு 222 ஏ. கியூ. ஐ. என்ற உச்சளவிலேயே காணப்பட்டது.

நேற்றைய தினம் சற்றுக் குறைந்து இருந்தாலும், 180 ஏ. கியூ. ஐ. என்ற சராசரி நிலைமையே அதிகம் காணப்பட்டது. இது வரும் நாட்களிலும் நீடிக்கலாம் என்றபோதும் காற்றின் வேகத்தைப் பொறுத்து மாசுக்காற்றின் தன்மை அதிகரித்தோ அல்லது குறைந்தோ காணப்படும் என்று ஐ. கியூ. எயார் தளத்தின் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. எனினும், காற்றின் வேகம் அதிகரிக்கும் சமயத்தில் மாசுபட்ட காற்றின் அளவு அதிகமாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேநேரம், தேசிய கட்டட ஆய்வு நிறுவகத்தின் தகவலின்படி முக்கிய நகரங்களில் காற்றின் தரச் சுட்டி, யாழ்ப்பாணத்தில் 212, கம்பஹாவில் 189, தம்புள்ளையில் 170 , கொழும்பில் 169, கண்டியில் 161, நீர்கொழும்பில் 170, அம்பலாந்தோட்டையில் 157 என்ற அளவிலும் காணப்பட்டன. (ஐ)

## தீவிர புயலாக....

வங்காள விரிகுடாவில் தோன்றி வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் 'மண்டாஸ்' புயலானது தீவிர புயலாக மாறியுள்ளது. இது வடக்கு-வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து இன்று நள்ளிரவுக்கும் நாளை சனிக்கிழமை காலைக்கும் இடையில் இந்தியாவின் தமிழ்நாட்டின் மரக்காணத்துக்கும் மகாபலிபுரத்துக்கும் இடையில் கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புயலின் தற்போதைய நிலையில் இதனால் இலங்கையின் எந்தப் பகுதிக்கும் நேரடியான பாதிப்பு கிடையாது. ஆனால், ஞாயிற்றுக்கிழமை வரை வடக்கு மாகாணத்தின் முழுப் பிரதேசத்துக்கும் கிழக்கு மாகாணத்தின் முழுப்பிரதேசத்துக்கும் மற்றும் வடமத்திய மாகாணத்தின் சில பகுதிகளுக்கும் தொடர்ச்சியாக கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

அத்தோடு இன்று முதல் நாளை காலை வரையும் நேற்றைய தினத்துடன் ஒப்பிடுகையில் காற்றின் வேகம் அதிகரித்தும் காணப்படும். கடற்கரைப் பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 50-65 கி.மீ. வரையும் உள் நிலப்பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 35-45 கி.மீ. வரையும் வீசும் வாய்ப்புள்ளது.

நேற்றைய தினம் உணரக்கூடிய வெப்பநிலை 18 பாகை செல்சியஸாகக் காணப்பட்டது. இந்நிலையில், இன்று வெள்ளிக்கிழமை வெப்பநிலை மேலும் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்தோடு ஈரப்பதன் அளவு மேலும் அதிகரிக்கும் என்பதனால் உணரக்கூடிய வெப்பநிலை அளவு மேலும் குறைவடையலாம். இதனால் இன்னமும் குளிரான வானிலை நிலவக்கூடும்.

'மண்டாஸ்' புயலின் காரணமாக கடல் அலைகள் உயர்வாக இருக்கும் என்பதனால் எத்தகைய காரணத்தைக் கொண்டும் கடற்கரைப் பகுதிகளுக்கு செல்வதை தவிர்ப்பது சிறந்தது - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## நிறைவேறியது....

நேற்று காலையே அறிவித்திருந்தது.

இதேபோன்று, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் க. வி. விக்னேஸ்வரன், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். வேலுகுமார் ஆகியோரும் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வரவு - செலவு திட்டத்துக்கு எதிராக வாக்களித்தது. (ஐ)

## இலாபத்திலேயே....

சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் கட்டணங்களை அதிகரித்ததன் பின்னர் மின்சார சபை 280 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான இலாபத்தை ஈட்டியது.

நிறுவனத்திற்குள் பணம் படிப்படியாகப் பாய்ந்து வருவதால், மின்சார சபைக்கு நட்டம் ஏற்படுவதாகக் கூற முடியாது - என்றார். (ஐ)

## புவியியல்,....

களுக்கு அமைவாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரச தலைவர் ரணில் விக்ரமசிங்க பதவியேற்றதன் பின்னர் மோசடி மற்றும் ஊழல் மோசடிகள் தொடர்பில் கிடைத்த முறைப்பாடுகளையடுத்து 14 அரச நிறுவனங்களின் தலைவர்கள் நீக்கப்பட்டுள்ளனர் என்று ஜனாதிபதி அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், அரச பணியாளர்கள் யாரேனும் மோசடி, ஊழல், முறைகேடுகளில் ஈடுபட்டனர் என்று தகவல் கிடைத்தால், அவர்கள் உடனடியாக பதவியில் இருந்து நீக்கப்படுவார்கள் என்று மூத்த அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேசமயம், புவியியல் மற்றும் சுரங்கப் பணியகத்தில் நிலவும் ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பில் அண்மையில் ஈழநாடு கட்டுரை ஒன்றை வெளியிட்டது. அதில், இவர்கள் பதவி நீக்கப்படலாம் என்ற விடயத்தையும் சுட்டிக்காட்டியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## காற்று மாசுபாட்....

அமைச்சின் செயலாளரும் மருத்துவருமான அனில் ஜாசிங்க எச்சரித்திருந்தார்.

பி. எம். 2.5 என்றளவில் காற்று மாசுபாடு காணப்படுமிடத்து காற்றிலுள்ள துகள்கள் சுவாசக் குழாயில் ஆழமாகப் பயணித்து நுரையீரலை அடையும். இந்த நுண்துகள்கள் நுரையீரலின் செயல்பாட்டை பாதிக்கும்.

தவிர, காற்றிலுள்ள நுண்துகள்களால் கண், மூக்கு, தொண்டை மற்றும் நுரையீரல் எரிச்சல், இருமல், தும்மல், சளி, மூச்சுத்திணறல் போன்ற குறுகியகால பாதிப்புக்களை ஏற்படுத்தும். இதயம் சார்ந்த நோய்களையும் அதிகரிக்கும்.

இதனால், மருத்துவமனையில் சேர்பவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதுடன், அவசர சிகிச்சை தேவைப்படுபவர்கள் மற்றும் இறப்புகளையும் அதிகரிக்க செய்யும்.

காற்று மாசு முதியவர்கள், குழந்தைகளையே அதிகம் பாதிக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

FIFA WORLD CUP Qatar2022

# உலகக் கிண்ண உதைபந்து காலிறுதி இன்று ஆரம்பம்!

டோஹா, டிசெ. 09

உலகக் கிண்ண உதைபந்தாட்ட போட்டியின் காலி றுதி சுற்று இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது.

காலிறுதி சுற்றுக்கு பிரேசில், குரோசியா, ஆர்ஜென் ரீனா, நெதர்லாந்து, போர்த்துக்கல், மொராக்கோ, பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய அணிகள் தகுதி பெற்றுள்ளன.

இன்று வெள்ளிக்கிழமை நடக்கும் காலிறுதிப் போட் டியில் இரவு 8.30 மணிக்கு (இலங்கை நேரம்) குரோ சியா - பிரேசில் அணிகள் மோதுகின்றன. சனிக்கிழமை நள்ளிரவு 12.30 மணிக்கு நடக்கும் இரண்டாவது போட்டி யில் நெதர்லாந்து அணி, ஆர்ஜென்ரீனாவை சந்திக்கிறது.

சனிக்கிழமை இரவு 8.30 மணிக்கு நடக்கும் போட்டி யில் மொராக்கோ அணி போர்த்துக்கல்லை எதிர்கொள் கிறது. மறுநாள் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 12.30 மணிக்கு நடக்கும் போட்டியில் இங்கிலாந்து - பிரான்ஸ் அணிகள் மோதுகின்றன. (ஐ)



# ஸ்பெயினின் பயிற்றுநர் புதவியிலிருந்து நீக்கம்!

மட்ரிட், டிசெ. 09

ஸ்பெயின் தேசிய உதைபந்தாட்ட அணியின் பயிற்றுநர் லூயிஸ் என்றிக் பதவியிலிருந்து நீக்கப்பட் டுள்ளார்.

கட்டாரில் நடைபெறும் உலகக் கிண்ண உதைபந் தாட்டத்தில் 16 அணிகளின் சுற்றில் மொராக்கோ அணியிடம் சமநிலை தவிர்ப்பு முறையில் தோல்வியுற்ற ஸ்பெய்ன் தொடரிலிருந்து வெளியேறியது.

இப்போட்டி முடிவடைந்து 48 மணித்தியாலங் களுக்குள், தனது பயிற்றுநரை நீக்கும் தீர்மானத்தை ஸ்பெய்ன் உதைபந்தாட்ட சம்மேளனம் அறிவித்துள் ளது.

2010ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தை ஸ்பெய்ன் வென்றது. ஆஸ்திரியாவைச் சேர்ந்த லூயிஸ் ஹென்றிக் 2018 ஆம் ஆண்டு ஸ்பெய்ன் அணியின் பயிற்றுநராக பதவியேற்றார்.

ஸ்பானிய அணியின் புதிய பயிற்றுநராக லூயிஸ் டி லா ஃபுவன்டே கஸ்டில்லோ நியமிக்கப்பட்டுள்ளார் என அந்நாட்டு கால்பந்தாட்டச் சம்மேளனம் நேற்று அறி வித்தது.

# பிராத்வெயிட் அபாரம் கண்டி அணி வெற்றி!

அம்பாந்தோட்டை, டிசெ. 09

பிராத்வெயிட்டின் அபார பந்து, கமிந்து மெண்டி ஸின் பொறுப்பான துடுப்பாட்டத்தால் காலி கிளாடி யேட்டர்ஸ் அணிக்கு எதிரான லங்கா பிறீமியர் லீக் போட்டியில் கண்டி பல்கன்ஸ் அணி 5 விக்கெட்களால் வெற்றிபெறுவதற்கு வழிவகுத்தன.

அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷ விளையாட்ட ரங்கில் புதன்கிழமை இரவு நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய காலி கிளாடியேட்டர்ஸ் 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 121 ஓட்டங் களைப் பெற்றது.

பவர்ப்ளே ஓவர்கள் நிறைவில் காலி கிளாடியேட் டர்ஸ் 5 விக்கெட்களை இழந்து 29 ஓட்டங்களை மாத் திரம் பெற்று தடுமாறிக்கொண்டிருந்தது.

அதனை தொடர்ந்து கண்டி பல்கன்ஸ் 3 பிடிகளைத் தவறவிட்டதால் காலி ஓரளவு நல்ல நிலையை அடைந்தது.

மொவின் சுபசிங்க, பாகிஸ்தானின் முன்னாள் வீரர் இமாத் வசிம் ஆகிய இருவரும் 6ஆவது விக்கெட்டுக் காக 71 ஓட்டங்களைப் பகிர்ந்து அணிக்கு சிறு உற்சாகத் தைக் கொடுத்தனர்.

மொவின் சுபசிங்க 40 ஓட்டங்களையும் இமாத் வசீம் 34 ஓட்டங்களையும் பெற்றனர். அவர்களைவிட அணித் தலைவர் குசல் மெண்டிஸ் (14), நுவனிது பெர்னாண்டோ (13) ஆகிய இருவரே 10 ஓட்டங்களுக்கு மேல் பெற்றனர்.

காலி கிளாடியேட்டர்ஸ் பந்துவீச்சில் பிராத்வெயிட் ஓட்டமற்ற ஓவர் உட்பட 4 ஓவர்களில் 14 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 4 விக்கெட்களை கைப்பற்றினார். ஐக்கிய அரபு இராச்சிய வீரர் ஸஹூர் கான் 26 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கண்டி பல்கன்ஸ் 15 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 123 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

முன்வரிசை வீரர்கள் மூவரும் துடுப்பாட்டத்தில் திறமையை வெளிப்படுத்தியதால் கண்டி பல்கன்ஸ் இலகுவாக வெற்றிபெற்றது.

பதும் நிசங்க (22), அண்ட்ரூ ப்ளெச்சர் (20) ஆகிய இருவரும் வேகமாக துடுப்பெடுத்தாடி 3.4 ஓவர்களில் 30 ஓட்டங்களைப் பகிர்ந்து நல்ல ஆரம்பத்தை இட்டுக் கொடுத்தனர். ஆனால், அதன் பின்னர் சீரான இடை



வெளியில் விக்கெட்கள் சரிந்தன.

எனினும், கமிந்து மெண்டிஸ் மிகவும் பொறுப்புடன் துடுப்பெடுத்தாடி 40 ஓட்டங்களைப் பெற்று தனது அணி வெற்றி இலக்கை அண்மிக்க உதவினார்.

அவர் ஆட்டமிழந்த பின்னர் பிராத்வெய்ட்டும் வனிந்து ஹசரங்கவும் வெற்றிக்கு தேவைப்பட்ட எஞ்சிய ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் நுவன் ப்ரதீப் 34 ஓட்டங்களுக்கு 2 விக் கெட்களை கைப்பற்றினர். (ஐ)

# லபுஷேன், ஹெட் சதம் ஆஸி. அணி முன்னிலை

அடிலெய்ட், டிசெ. 09

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் முதல் நாளில் அவுஸ்திரேலிய அணி 3 விக்கெட்கள் இழப்புக்கு 330 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

அடிலெய்டில் நடைபெற்று வரும் பகலிரவு டெஸ்டில் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி, துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது.

வோர்ணர் 21 ஓட்டங்களுக்கும் அணித் தலைவர் ஸ்மித் ஓட்டம் எதுவும் எடுக்காமலும் ஆட்டமிழந்தார் கள். உஸ்மான் கவாஜா 62 ஓட்டங்கள் எடுத்தார்.

லபுஷேன், டிராவிஸ் ஹெட் சிறப்பாக விளையாடி சதம் அடித்தார்கள். லபுஷேன் 186 பந்துகளிலும் ஹெட் 125 பந்துகளிலும் தங்களுடைய சதத்தைப் பூர்த்தி செய்தார்கள்.

முதல் நாளில் அவுஸ்திரேலிய அணி, 89 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 330 ஓட்டங்கள் எடுத்துள்ளது. லபுஷேன் 120, ஹெட் 114 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார்கள்.

முதல் டெஸ்டை 164 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று 1-0 என தொடரில் முன்னிலையில் உள்ளது அவுஸ்திரேலிய அணி. (ஐ)





# சர்வதேச போட்டியில் 500 சிக்ஸர் ரோஹித் சர்மா புதிய மைல்கல்!

மிர்பூர், டிசெ. 09

சர்வதேச கிரிக்கெட்டில் 500 சிக்ஸர்கள் அடித்த முதல் இந்திய கிரிக்கெட் வீரர் என்ற சாதனையை ரோஹித் சர்மா படைத்தார்.

இந்திய கிரிக்கெட் அணி பங்களாதேஷில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இதுவரை நடந்த இரு போட்டிகளிலும் பங்களா தேஷ் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது. நேற்று முன்னதினம் நடைபெற்ற 2ஆவது ஒருநாள் போட்டியில் காயம் காரணமாக கடைசி கட்டத்தில் இறங்கி அதிரடி யாக ஆடிய ரோகித் சர்மா 28 பந்துகளில் 5 சிக்ஸர்கள், 3 பௌண்ட்ரிகள் என 51 ஓட்டங்களை விளாசினார்.

இந்நிலையில், சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் 500இற்கும் மேற்பட்ட சிக்சர்கள் அடித்த முதல் இந்திய கிரிக்கெட் வீரர் என்ற சாதனையை ரோஹித் சர்மா படைத்தார்.

ஒருநாள் போட்டிகளில் 256 சிக்சர்களையும், டி20 தொடரில் 182 சிக்சர்களையும், டெஸ்ட் தொடரில் 64 சிக்ஸர்களையும் ரோஹித் சர்மா விளாசியுள்ளார். சர்வ தேச கிரிக்கெட் போட்டிகளில் அதிக சிக்ஸர்கள் (553) அடித்த வீரர்கள் பட்டியலில் மேற்கிந்தியத் தீவின் கிறிஸ் கெயில் முதலிடத்தில் உள்ளார். இரண்டாவது இடத் தில் ரோஹித் சர்மா உள்ளார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.12.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.